# முரசொலி

'வார இதழ்.

ஆசிரியர் மு. கருணநிதி.

2 அணா

முரசு 2 | சென்னை | 14—10—55 | வெள்ளி | ஒலி 29


# வெள்ளம்-

## ஒரு விளக்கம்!

வடநாடு வெள்ளக்காடாய் கிடக்கிறது!

யமுனை நதி, வடநாட்டுத் தலைவர்களைப் போலவே திடீரென்று திசைமாறிஓடுகிறதாம்!

டில்லி மாநகரத்திலே பகைவரின் படைவெள்ளம் புகுந்ததாகத்தான் சரித்திரத்திலே படித்திருக்கிறோம். பேரரசுகள் பல அழிந்து, அந்த சாம்பல் மேட்டிலே வேறு அரசுகள் முளைத்திருக்கின்றன—என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேரு போல் வாழ்ந்த மோரியர் ஆட்சி; அதைக் கொன்று கூறுபோட்டுக் கிளம்பிய குப்தர்களின் சிம்மாசனம்; — கால வெள்ளம் டில்லியிலே இப்படிப் பல விதங்களில் ஆட்சிச் சக்கரத்தை உருட்டி விளையாடியிருக்கிறது.

அடிமையாய் இருந்து அரசனாய் மடிந்த குத்புதீன் வம்சம் - அவனுக்குப் பின்னே பலகாலம் சென்று குடியேறிய பாபரின் பரம்பரை—அந்த மொகலாயர் கூடாரத்துக்கு நெருப்புவைத்து விட்டு, அரசுகட்டில் ஏறுவதிலே குறிப்பாய் இருந்த ஆங்கில ஏகாதிபத்யம் —

அந்தச் சமாதியிலே இப்போது தோன்றியிருக்கும் வடநாட்டவர் ஏகாதிபத்யம்—

—சரித்திரத்தின் ஏடுகள் புரட்டப்படும்போது அவை ஓதும் உண்மைகள் இவை.

சரித்திராசிரியர்கள் 'சாம்ராஜ்யங்களின் சுடுகாடு' என்கிறார்கள் டில்லியை! அந்தச் சுடுகாட்டிலேதான் இந்த வாரம் வெள்ளம் புகுந்திருக்கிறது!

ஆள்சேதம்;பொருள்சேதம்; கால்நடைச் சேதம்—அளவிடற்கரியனவாம்!

அந்த வெள்ளத்தைக் குறித்துத்தான் இரண்டு பத்திரிகைகள் வெவ்வேறு விதமாக 'கேலிச் சித்திரம்' தீட்டியிருக்கின்றன.

பஞ்சாப்—பெப்சுவிலே ஏழாயிரம் கிராமங்கள் நீரில் மூழ்கின; ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன; சுமார் ஐம்பது கோடி மதிப்புள்ள சொத்து சேதமடைந்திருக்கிறது—என்று பத்திரிகையிலே செய்தி வருவதற்கு சில தினங்கள் முன்னதாகத்தான் திட்டங்கள் உருவாக்கும் டெல்லி அமைச்சர் நந்தா குறிப்பிட்டார்—அல்ல; அல்ல; மார்தட்டிக் காட்டினார்—'வெள்ளங்கள் ஏற்படாத வகையில் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிட்டோம்'—என்று!

அவர் கூறி முடித்தார். அணையுடைத்து ஆற்று வெள்ளமும் புறப்பட்டு விட்டது.

அதைத்தான் கீழேயுள்ள 'சங்கர்ஸ் வீக்லி' சித்திரம் கேலி செய்கிறது, வெள்ளத்தால் மக்கள் வேதனைப்படும்போது, நீரில் மூழ்கிடாத உயரத்திற்கு வெற்றி பீடம் அமைத்து,நந்தா அதிலே நின்றுகொண்டு 'வெள்ளமெனும் அரக்கனை வீழ்த்திவிட்டோம்!'—என்று வீரவுரை ஆற்றுவதாக!

பாரத தேசமாளும் தேசியக் குழந்தைகள் வாயால் அணை போடுகிறார்கள்; சொற்களால்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

'புது டில்லியில் வெள்ளம்'!




'ஹிந்தி விஷயத்தில் தென்னிந்தியரின் உணர்ச்சியை புது டில்லியில் உள்ள அதிகாரிகள் முன்னைவிட இப்போது நன்ருகப் புரிந்து கொள்ளுகின்றனர்.'
—'சுதேசமித்திரன்' 11—10—55.

'வெற்றி பீடம்'!



வெள்ளத்தைத் தடுப்பதற்கான முயற்சிகள் நாம் அடைந்துள்ள மகிழ்ச்சிக்குரியதாகவும், நம்மை உற்சாகப்படுத்துவதாகவும் இருக்கிறது'—நந்தா.
—'சங்கர்ஸ் வீக்லி'

# கொள்ளைக்காரன்!

[ சிறு கதை ]

பி. சி. கணேசன்
பி. எஸ்ஸி., பி. டி.

இரவு; மேகக் கடலுக்கு மத்தியில் நிலவுவெள்ளி ஓடமாக மிதந்துகொண்டிருந்தது. அடர்ந்த மரங்களுக்கு மத்தியில் வளைந்து சென்ற அந்தப் பாதை வெண்ணிற நிலவொளியில் நீண்ட பாம்புபோலக் காட்சியளித்தது. பாதையின் ஒரு புறத்தே நின்ற பளிங்கு மாளிகை, காதல் கலைக்கோயில் தாஜ்மஹாலை நினைப்பூட்டியது.

எங்கும் அமைதி. அமைதியைக் கிழித்துக்கொண்டு அழகிய வெண் புரவியொன்று பாய்ந்து வந்துகொண்டிருக்கிறது. அதன்மீது சவாரி செய்து வரும் ஆணழகனே, ஆனந்தப் பள்ளு பாடியபடியே வந்து கொண்டிருக்கிறன்.

அவன் உள்ளம் துள்ளி விளையாடுகிறது; உணர்ச்சி பொங்கி வழிகிறது. இடையில் அவன் சொருகியிருக்கும் சுழல் துப்பாக்கி, நிலவொளியில் பளிச்சிடுகிறது!

கல்லும் மலையும் காட்டாறும் அவன் வழியைத் தடை செய்யும் திறம் இழந்தன! எல்லையில்லா இன்பத்தைக் காணச் செல்லும் அந்தக் காளை, எதிரிலுள்ள எதையுமே பொருட்படுத்தாமல் சவாரி செய்து கொண்டேயிருந்தான்!

பளிங்கு மாளிகை வந்தவுடன் கடிவாளத்தை முழு மூச்சோடு இழுத்துப் பிடித்தான். அருகிலுள்ள ஜன்னல் புறமாகக் குதிரையைச் செலுத்திக் கையிலுள்ள சாட்டையின் கைப்பிடியால் ஜன்னல் கதவைத் தட்டினன்.

ஜன்னல் கதவு திறக்கவில்லை!

அவன் முகம் சோபையிழந்தது. வாயினல் மெதுவாக 'விட்டி' அடித்தான்.

ஜன்னல் கதவு திறந்தது. கதவுக்குப் பின்புறமிருந்த நீலத்திரை விலகியது! அதிலிருந்து ஒரு நிலா முகம் வெளிப்பட்டது!

"பெஸ்!"—உணர்ச்சி முழுவதும் கொட்டி, ஆராத ஆசையோடு அந்தப் பெயரை உச்சரித்தான்.

பெஸ் சிரித்தாள் — உலகமே அவனுக்கு இன்ப மயமாகத் தோன்றியது.

திரையின்மீதிருந்து ஜன்னலைத் தாவி அவள் கரங்களைப் பற்றினன். இன்பம் இதயத்தில் பெருக்கெடுக்க, மலராய்த் துவண்டு அவன் மடிமீது சாய்ந்தாள்!

"ஜாக், நீங்கள் வரும்வரை என்னுடைய உயிர் என்னிடத்திலேயே இல்லை; உங்களுக்கு ஏதாவது அபாயம் ஏற்பட்டுவிட்டதோ என்று..."

அவன் இதைக் கேட்டு உரத்துச் சிரித்தான். மலர்க் கரங்களால், யாராவது விழித்துக் கொள்ளப் போகிறார்களோ என்ற அச்சத்தில் அவன் வாயைப் பொத்தினுள்.

"உன்னுதடுகளில் ஊறிடும் இன்னமுதைப் பருகவரும் என்னை, கட்டாரியும் — கைத்துப்பாக்கியும் தடுத்து நிறுத்தி விடும் என்று நினைக்கிருய், கண்ணே! உடல் சாய்ந்தாலும் உயிர் பறந்துவந்து உன்னிடம் அடைக்கலம் புகுந்துவிடாதா?"

அவள் மார்பு பெருமிதத்தால் விம்மியது. அவனுடைய கண்கள் அவளுடைய இளமையழகை விருந்தாக்கி மகிழ்ந்து கொண்டிருந்தன!

ஜாக் வானத்தைப் பார்த்தான். எதையோ நினைத்துக் கொண்டவன்போல் திடீரென்று எழுந்து, "எனக்கு நேரமாகிவிட்டது, பெஸ்!" — என்ருன்.

"அதற்குள்ளாகவா?"-அவள் குழைந்தாள்!

"ஆமாம் கண்ணே! இன்று இராஜபாட்டையின் வழியாக ஒரு பணுதிபதி வடக்கு நோக்கிப் போகிருன். அவனைத் தான்வழிப்பறிக்கொள்ளையடிக்கப்போகிறேன். என்தொழிலில் இன்று ஒரு பொன்னுள். கொள்ளையடித்த பொன்னையும் மணியையும் பொருளையும் உனக்குக் காணிக்கையாக்கி மகிழ, கதிரவன் உதயத்துக்கு முன் வந்து சேர்ந்துவிடுவேன்"

அவளுடைய கண்களில் நீர் கரையிட்டது. "அரசருடைய ஆட்கள் உங்களைப் பிடித்து விட்டால்..."-அவள் பேச முடியாமல் தேம்பினுள்.

அவன் உதடுகளில் கேலிப் புன்னகை நெளிந்தது. "கவலைப்படாதே கண்ணே! தொல்லையேதும் இல்லாவிட்டால், சூரியோதயத்துக்குள் உன்னைக் காண மறுபடியும் வந்துவிடுவேன். அப்படி இன்று அரசருடைய ஆட்கள் என்னைப் பிடிக்க முயன்ருல், நாளை இரவு கட்டாயம் அண்டசராசரமும் எதிர்த்து நின்ருலும், அத்தனையும் தூளாக்கி, உன் கரங்களில் வந்து சேர்ந்துவிடுவேன்"

அவள் ஏக்கத்தோடு அவனைப் பார்த்தாள். ஜாக், அவளை அன்போடு மார்புடன் அணைத்துக் கொண்டான். இருவருடைய உதடுகளும் கொஞ்ச நேரம் கோலாகலமாகக் கொஞ்சி விளையாடின.

மறுகணம் ஜாக் குதிரை மீதேறி விரைந்து சென்று கொண்டிருந்தான்.

இதுவரையில் அவர்களுடைய உரையாடலைக் கவனமாக மரத்தின் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த உருவமொன்று புதர்களினூடே பதுங்கி மறைந்தது!

★

பெஸ், ஒரு பிரபுவின் மகள். அந்த வட்டாரத்திலேயே எழிலரசியாகத் தனியாட்சி செய்தவள் அவள். இந்த வண்டு விழியாளுக்குத் தொண்டு செய்ய வாய்ப்புக் கிட்டாதா என்று ஏங்கிக் கிடந்த வாலிபப் பட்டாளம் ஏராளம்! அவள் சிரிப்புக்கு ஜெகத்தையே விலைபேச முற்பட்ட பிரபுக்கள் எத்தனையோ பேர்! இந்தத் தங்கச் சிலை தங்களுடைய மாளிகையின் அலங்காரப் பொருளாகும்நாள் எந்த நாளோ என எண்ணி, ஏங்கி இளைத்தோரும், தந்த நிகர் மேனியாளைத் தழுவ வாய்ப்பில்லாத இவ்வாழ்க்கையும் ஒருவாழ்க்கையா என்ற விரக்தி மனப்பான்மை கொண்டோரும், இப்படி எத்தனையோ ரகம்! இவ்வளவு பக்த கோடிகள் ஆராதனை செய்தும், இவர்களில் ஒருவருக்காவது இந்த அழகுத் தெய்வம் அருள் பாலிக்கவில்லை! கடைசியில், வசதிபடைத்த வழிப்போக்கர்களைக் கொள்ளையடிக்கும் வழிப்பறிக் கொள்ளைக்காரனுன ஜாக் தான் அவளுடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டான்!

காதல் போட்டியில் கள்வனிடம் தோல்வியடைவது என்ருல் யாருக்குத்தான் ஆத்திரம் வராது? கள்வன் என்ற அளவிலே மட்டுமல்லாது, பெஸ்ஸின் காதலன் என்ற தன்மையிலும் அவனுக்கு விரோதிகள் பெருகினர். பேரழகி பெஸ்ஸுக்காக வாழ்நாளை வீணுளாக்கி விரக்தி மனப்பான்மை கொண்டிருந்தோரில் டாமும் ஒருவன். டாம் பெஸ்ஸினுடைய உறவினன். குறுகுறு நடை நடந்து, சிறுகை நீட்டி, சிறுமியாகத் திரிந்த நாளிலிருந்து அந்த இன்பச் சிட்டுவிடம் தன் உள்ளத்தை அர்ப்பணித்து விட்டவன், டாம். பேணிப் பாதுகாத்து வளர்த்த அந்தப் பேடு, பிறிதொருவனிடம்—அதிலும் கள்வனிடம்—பறந்து சென்று விடுவதென்ருல்......? டாம் பொறுமினன், உறுமினன்! பெஸ் மசியவில்லை!! கண்ணீரால் அவள் பாதங்களைக் கழுவினன்— அவள் நெஞ்சம் இளகவில்லை. புகழ்,பேசினுல், துதி பாடினுல் பெண்கள் துவண்டு விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிருன். தோத்திரம் செய்தான்; அவள் ஆத்திரம் அடைந்தாள். பொறுமையிழந்தான் டாம்; பொருமைச் சூருவளியாளுன்! ஜாக்கை—பெஸ்ஸின் உள்ளங்கவர் கள்வனை—ஒழித்துக் கட்டத் திட்டமிட்டான். ஆனுல், அந்த வேலையைச் செய்வது எப்படி? அரசாங்கமே அந்தக் காரியத்தைச் செய்யத் திறனிழந்து தவிக்கும்போது...! சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். அவனுடைய எண்ணம் ஈடேறும் காலம் நெருங்கிவிட்டது.

மரங்களின் மறைவில்பதுங்கி நின்று, ஜாக்—பெஸ் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு நகர்ந்த உருவம் டாம் தான்!

★

மறுநாள் விடியற்காலையில் வழிமேல் விழிவைத்து, ஜாக்கின் வரவுக்காகக் காத்திருந்தாள் பெஸ். ஆவல் நிறைந்த விழிகளில், நேரம் ஆக ஆக ஆயாசம் தோன்றியது.

கதிரவன் வானக் கோபுரத்தின் மேல் ஏறிக்கொண்டே இருந்தான். ஏந்திழை பெஸ்ஸின் இன்பக்கோபுரம் சாய்ந்து கொண்டேயிருந்தது.

மாலையும் வந்தது—வானத்தில் நிலவுத் தாமரையும் பூத்தது. காதல் கதிரவன் கண்ணில் படாததால், பெஸ்ஸின் இதயத் தாமரை மட்டும் மலரவே இல்லை!

நீண்டபாதை அவள் கண்முன் விரிந்து கிடந்தது. நிலவு பகல் மாதிரி பளிச் சென்று ஒளி பரப்பிக்கொண்டிருந்தது.

திடீரென்று குதிரையின் குளம்போசை கேட்டது. தீராத ஆசையோடு ஜன்னலின் அருகே சென்று விழிகளை அகல விரித்துப் பார்த்தாள்!

குதிரைப் படைவீரர்கள்—ஒரு பெரிய பட்டாளமே மாளிகையை நோக்கி வந்து கொண்ருந்தது.

டாம், அவனுடைய 'கடமை'யைச் செய்து விட்டான்!

மாளிகைக்குள்ளே படைவீரர்கள் புகுந்தனர். பெஸ், மந்தியிடம் சிக்கிய மலரானுள்.

அந்த அழகுப்பெட்டகத்தை, உயிர்பெற்ற அந்தக் கலை ஓவியத்தை-கள்வனின் காதலியை—தூணேடு சேர்த்துக் கட்டினர். அவளுடைய விழிகள்வேதனைக் குளமாயின.

அவள் மார்புக்கு நேராக நீண்ட துப்பாக்கி ஒன்றையும்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 14—10—55 வெள்ளி

# 'தேர்தல் தேவாரம்'

**1957**-ம் ஆண்டின் ஆரம்பத்தில் வரப்போகும் போதுத் தேர்தல் வேட்டைக்காக இப்போழுதிலிருந்தே வரிந்து கட்டிக்கோண்டு கிளம்பி விட்டது காங்கிரஸ் கட்சி. கையிலே பணமும், மெய்யிலே கதராடையும், கருத்திலே மக்களைப் பதரேன மதிக்கும் திமிரும் கோண்ட திமிங்கலங்கள் பல, தேர்தலிலே கலந்துகோள்ளும் தேச நலன் மிக்க சிறிய மீன்களை விழுங்கி ஏப்பமிட வால் சுழற்றித் திரிகின்றன. எதிர்ப்போரை அழித்துவிட பின்னாலிருந்து தாக்கும் 'இராமபாணம்' உட்பட, கூடயிருந்தே கழுத்தை நெறிக்கும் 'சாணக்கிய பாணம்'வரை காங்கிரஸ் உலைக்கூடத்திலே தயாராகிக் கோண்டிருக்கின்றன. நகர சபைத் தேர்தல் களத்திலே பரிட்சை பார்க்கப்பட்ட அந்த ஆயுதங்களைத் துணைக்கு வைத்துக்கோண்டு அக். 11-ம் தேதியன்று புது டில்லியில் கூடிய காங்கிரசின் மத்திய தேர்தல் கமிட்டியினர் ஆபேட்சகர்கள் போறுக்குவதிலே சில அடிப்படைக் கோள்கைகளை வகுத்திருக்கின்றனராம்.

ஆமாம்; காங்கிரசின் பெயரால் அபேட்சா பத்திரம் தாக்கல் செய்வதற்கு தகுதிகள் சில வேண்டுமோம்!

என்ன 'தகுதி'கள் அவை? எப்படிப்பட்ட 'கோள்கை'கள் அவை? குட்டையில் விழுந்து புரளுவதற்கு கோள்கையா வேண்டும்?—கேள்விகள் புறப்படுகின்றன, நகரசபைத் தேர்தலிலே காங்கிரசின் பெயரால் நிற்போர் கடைப்பிடிக்கும் கயமைத் தன்மைகளைக் கவனித்த பிறகு!

செல்வச் செருக்கும், அந்தஸ்துத் திமிரும் கோண்டோர் 'காங்கிரசைக் கைவிடாதீர்கள்!'—என்று கூறும் நேருவின் சுவரோட்டிகளை ஒட்டிக் கோள்கிறார்கள்.

மனிதாபிமானத்தையும், மக்கள் வாழ்வையும் மறந்துவிட்டவர்கள் மாட்டுச் சின்னத்தைக் காட்டி ஓட்டு கேட்கிறார்கள்.

செல்வாக்கு செத்துவிட்டது; செல்வப் பெருக்கால் வெல்வோம் என்ற நம்பிக்கை நசித்துவிட்டது-என்கிற நிலை பிறந்ததால், காமராசர் நேருவை அழைத்து வந்து, அவருக்கு மாலை அணிவித்து, அப்போது எடுக்கப்பட்ட போட்டோவைக் காட்டி ஊர்வாயைக் கிண்டிவிடுகிறார்!

'நான் ஆகஸ்டிலே கம்பி அறுத்தேன்; காராக்கிரகத்தில் குடல் பிடுங்கும் மலச் சட்டி ஏந்தினேன்!'—என்று மார்தட்டிச் சோல்பவனுக்கு மாட்டுச் சின்னம் தரப்படுவது இல்லை—சில மைனர்கள் தட்டிப் பறித்துவிடுகிறார்கள், உண்மை தியாகிகளைத் தீக்குழியில் தள்ளிவிட்டு!

அறம் வளர்த்தோன்; அன்பு காட்டியோன்; அப்பா, அம்மா ஏசிய போதும், அன்பு மனைவி அடக்க முடியாத கண்ணீரைக் கோட்டிய போதும், அருகிருந்தோர் அபவாதப் பழிகளைக் கிளப்பிய போதும் 'இராட்டைக் கோடியே என் இலட்சியம்'—'காங்கிரசே என் கண்மணி' என்று நத்திக் கிடந்தவர்களேல்லாம் ஒதுக்கி வைக்கப்பட்டு, நேற்று கிரகப்பிரவேசம் நடத்தியவர்கள் இன்று நகரசபை வாயிலிலே காமராசரோடு கைகுலுக்குகிறார்கள்.

உரிமை முரசம் தட்டப்பட்டபோது கதவை மூடிக்கோண்டு கண்ணாடியிலே அழகைப் பார்த்துக் கோண்டிருந்தவர்கள், இன்று காங்கிரசின் காவலர்களாய்-தேர்தல் ரதத்தின் அச்சாணியாய் இருக்க வேண்டிய நிலைமையை உண்டாக்கிவிட்டுத்தான் புதுடில்லியிலே கூடி போதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைப் போறுக்குவதற்கு சில திட்டவட்டமான 'கோள்கைகளை' வகுக்கப் போகிறார்களாம்'!

கோள்கையே உயிர் என்று கிடந்தவர்கள் நகர சபைத் தேர்தல் சமயத்திலே கூளமாய் மதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய மனப் புண் மாறவில்லை—அதற்குள்ளாகவே அடுத்த போதுத் தேர்தலுக்கான மாரடிப்பு அவர்கள் காதுகளைக் குடைகிறது!

பல 'கோள்கை'களுள் முதலாவதாக, கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உடன்பட்ட காங்கிரஸ்காரர்தானா—என்று அபேட்சகராக விண்ணப்பம் விடுப்போர் ஆராயப்படுவராம்.

நிலச் சீர்திருத்தம்; தோழிலாளர் நலன்; நாட்டுக்குப் பயனுள்ள ஆக்க வேலைகள்—இவைகளை அந்த அபேட்சகர் எந்த அளவுக்குப் புரிந்திருக்கிறார் என்பதும் கருதப்படுமோம்!

அவர் சோஷலிச சமுதாயத்தை சிருஷ்டிப்பதில் அக்கரை கோண்டவர்தானா என்று அலசப்படுமோம்.

கடைசியாக, ஒவ்வோரு காங்கிரஸ் பக்தர்களும் கேட்ட அளவிலேயே திடுக்கிடக்கூடிய கோள்கை யோன்றையும் வகுத்திருக்கிறார்கள்.

அதாவது, சம்மந்தப்பட்ட அபேட்சகருடைய சோந்த வாழ்க்கையும், அரசியல் வாழ்க்கையும் தூய்மையுடையதுதானா—என்பதும் ஆராயப்படுமோம்!

பல்வும், பவிஷும் போன கிழவி அழகுப் போட்டியிலே கலந்து கோள்வதுபோல் இருக்கிறது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் கமிட்டி தந்திருக்கும் விதிகள் !

நகமிழந்த புலி யானையின்மீது பாய்வதைப் போல் இருக்கிறது காங்கிரஸ் கட்சியின் புதிய கோள்கைகளிலே போதிந்திருக்கும் வீராவேசம் !

–கட்சியின் கட்டுப்பாட்டுக்குப் பணியும் பழுத்த காங்கிரஸ்வாதி-ஆக்க வேலைகளின் தந்தை-சோஷலிசபாணியின் சிற்பி—அப்பழுக்கற்ற அரசியல் வாழ்வும், பழுதில்லா சோந்த வாழ்வும் படைத்தோன்!

—அத்தகையோனைத்தான் அபேட்சகனாக ஏற்றுக் கோள்வேன் என்கிறது மத்ய தேர்தல் கமிட்டி!

பணபல மிக்கோரின் கையிலே பஞ்சாயத்து போர்டுகளை ஒப்புவித்துவிட்டு, நேற்று அணிந்திருந்த சில்க் ஜிப்பாவைக் கழற்றிவிட்டு இன்று கதர்ச் சட்டைக்கு அளவு எடுப்போருக்கு ஆதரவு கோடுத்துவிட்டு, இப்போது முடிவு கட்டுகிறார்கள், உண்மை ஊழியனுக்குத்தான் அனுமதிச் சீட்டு வழங்குவோமேன்று!

சூழ்ச்சிப் பணி மூடிய சோந்த வாழ்வு கோண்டோர்—இருட்டறையில் இரு கண்கள் மூடிக்கோண்டு இழிதகை செயல் புரிவோர்-போழுது விடிந்ததும், போதுமக்கள் தோண்டனாக வேஷம் புனைவோர்—பேர்மிட் பேரம் நடத்தியோர்—இலஞ்ச ஊழல்களிலே பெரும் பங்கு பெற்றோர்—இவர்கள் அனைவரும் இன்று காங்கிரசின் பெயரால் எம். எல். ஏ.க்களாய்—எம். பி. க்களாய் நிற்பதற்குரிய வாய்ப்பை தாராளமாக அளித்த, அவர்களை யெல்லாம் இன்று நாட்டிலே நடமாட விட்டுவிட்டுத்தான் நாசூக்கான விதி முறைகள் வகுக்கிறது, காங்கிரஸ் கமிட்டி!

பகல் வேஷம்; பக்காத் திருட்டுத்தனம்; புண்ணின்மேல் தேளிக்கும் பன்னீர்; பாமர மக்களின் கண்களை மூடும் கண்ணியமற்ற செயல்—அகராதியிலுள்ள அத்தனை வார்த்தைகளும் காங்கிரஸ் மத்தியக் கமிட்டியினர் விதிமுறைகள் என்ற பெயரிலே தயாரித்திருக்கும் 'தேர்தல் தேவாரப் பாசுரங்'களுக்குப் போருந்தும்போல் இருக்கிறது!

★


**விரைவில் ஆரம்பமாகிறது !**

**கருணாநிதி**

**எழுதும் புதிய தோடர்கதை !**

**வெள்ளிக்கிழமை**

# பார்த்ததும், பாராததும்.

பண்டிதர் பவனி யிங்கே,
பார்த்திடப் பத்து லட்சம்!
மண்டில மேத்தும் மைந்தன்
மார்பிலே மாலே, பன்னீர்!
கண்டிலம். இதுபோல் காட்சி
தரணியில்; எங்கும், என்றும்!
உண்டிகள், வாழ்த்துப் பாக்கள்
உவகையின் இன்ப ஊற்று!

பேழைகள், வெள்ளி, தங்கம்
பதுமைகள், ஆடை, செங்கோல்
தாழைகள், மடல்கள், ரோஜாத்
தோரணம். கும்பம், மேளா!
வாழைகள், முல்லே, மல்லி
வகுத்த நற்பந்தல், வாழ்வு!
ஏழைகள் பெய்த இரத்தம்
எடுத்த நல்லுருவ மிஃதாம்!

காடுகள் வெட்ட லானர்,
கனிமரச் சோலே கண்டார்!
மேடுகள், பள்ளம் தீர்த்தார்
மாபெரும் சாலே கொண்டார்!
வீடுகள் எழுந்த தங்கே,
விதம், விதம், விளக்குதந்தார்
ஏடுகள் தேவை கண்டீர்
எழுதிடு! புதிய தோற்றம்.

பொன்னெளி நகரம் கண்டார்
பண்டிதர், தமிழ கத்தில்
நன்னய வார்த்தை சொல்லல்
நலமெனக் கருதி விண்டார்.
பின்னய நிலேயை எண்ணிப்
பிதற்றுதல் தீதென் றெண்ணி,
என்னரும் தமிழ கத்தை
''எழில்மலர்ச் சோலே'' என்றார்.

வடக்கினில் வாடை வெப்பம்,
வேதனே, குமுறல், தொல்லே
அடக்கிடும் வலிமை காணேன்!
அடங்கிடும் நிலேயு மில்லே.
படைக்கலப் பயிற்சி கொண்டோர்,
பார்புகழ் அமைதி பூண்டோர்,
கொடைத்திறத் தமிழர் வாழும்
தமிழகம் அமைதி மன்றம்!

தலேநகர் சென்னே அங்கே
கோட்டையின் உச்சி மேலே!
கலேநகர் தஞ்சை, சேலம்,
தளேதகர்த் தெறிந்த பாண்டி.
மலேயெயில் திருச்சி, ஆரூர்,
மாணெழில் நாகை, வேலூர்,
தலேநிகர் தலேவர் சென்றார்
செப்பினர் ''ஒழுங்கு'' பற்றி!

எங்கணும் இன்ப நாதம்!
இன்னிசை, பாடல், ஆடல்!
தங்கிடு மிடங்க ளெல்லாம்,
தந்திடு மின்ப மெல்லாம்!
பொங்கிடும் மகிழ்ச்சி யூற்றில்
பண்டிதர் திளேத்து நின்றார்.
பங்கிடும் வறுமை, கொல்லும்
பட்டினி, பார்க்க வில்லே!

சாக்கடை, நாற்றக் கொட்டில்
சந்தணக் காடாய்க் கண்டோர்,
யாக்கையை விற்போர், வாழ்வு
யாதெனும் நிலேமை யற்றோர்,
போக்கிலா நிலேயில், பிச்சைப்
பாத்திரம் கரத்திற் கொண்டோர்,
நாக்கிலாப் பூச்சி யாகி
நலிவதைப் பார்க்க வில்லே!

வெள்ளெலும் புரைந்து தேய,
மார்பெலும் பொடிந்து மாய,
பள்ளமும் மேடு மொன்றாய்ப்
பரப்பிட 'ரிக்ஷா' ஓட்டித்
துள்ளிடும் இளமை தீய்ப்போர்
துணேவியர், குழந்தை துஞ்சும்
பள்ளிகள், பாதை யோரம்!
பண்டிதர் பார்க்க வில்லே.

வயலிலே மக்கள், அன்னர்
வயிற்றிலே பசித்தீ! வாழ்வு
புயலிலே! வாழ்வின் வீணே
புழுதியில்! புரட்டர் பேச்சின்
மயலிலே ஆட்சி! மானம்
மாட்சிகள் குப்பை மேட்டில்!
கயல்விழி கண்ணீர் வாவி!
பண்டிதர் பார்க்க வில்லே.

செய்குன்று கண்டார் நேரு
செயற்கையில் ஒன்றி நின்றார்!
பொய்யென்று புரிய வில்லே,
போதனே! அவரென் செய்வார்?
மெய்யென்று கண்ட காட்சி
மெத்தவே ஜோடிப் பன்றோ?
பெய்தது பணம், அஃதங்கே
செய்தது வாணம், கூத்து!

பண்டிதர் பறந்து விட்டார்;
பறந்ததும் மறைந்த தெல்லாம்!
பண்டிதர் பார்த்த தெல்லாம்
பட்டென வொழிந்த திங்கே
பண்டிதர் காணுக் காட்சி
பார்க்கிறோம், வழக்கம் போல!
பண்டிதர் பவனிக் காகப்
பாழ்தொகை இலட்சம்! இலட்சம்!

**கி. மனேகரன்**
பி.ஏ. [ஆனர்ஸ்]

## கொள்கை விளக்கு கோபுரம் போலே!

### சித்தூர்

16—10—55 ஞாயிறு மாலே 6— மணிக்கு, அண்ணுமலே முதலி தோட்டத்தில், தோழர் எம். சுப்பிரமணியம் அவர்கள் தலேமையில், பலர் பேசுவர். அன்று காந்திச் சாலே கிளேக் கழக அலுவலகத்தில் அறிஞர் அண்ணு அவர்களின் உருவப் படத்தை தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திறந்து வைப்பார்கள்.

### துறையூர்

16—10—55 ஞாயிறு காலே 9— மணிக்கு, பாரதி தியேட்டரில், தோழர் பொ. சண்முகம் அவர்கள் தலேமையில். தி. மு. கழக 7-வது ஆண்டுவிழா நடைபெறும். கவிஞர் கண்ணதாசன், தோழர் து. ப. அழகமுத்து—ஆகியோர் பேசுவர்.

### ஆம்பூர்

16—10—55 ஞாயிறு மாலே 6— மணிக்கு, முகமதலி திடலில், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுவார்.

### புகலூர்

18–10–55 செல்வாய் மாலே 6-30 மணிக்கு, சர்க்கரை ஆலேயை அடுத்துள்ள செம்படாபாளேயம் மைதானத்தில், அறிஞர் அண்ணு, தோழர் ஏ. பி. தருமலிங்கம்—ஆகியோர் பேசுவர். கூட்டத்தில் ஆலேத் தொழிலாளர்கள் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

### சென்னே (3-வது வட்டம்)

20–10–55 வியாழன் மாலே 5–30 மணிக்கு, மீனுட்சி அம்மன் பேட்டையில், வட சென்னே தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற முதல் ஆண்டு விழா தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் தலேமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் தென்னரசு—ஆகியோர் பேசுவர்.


திருப்பத்தூர்

**கருணுநிதி படிப்பகத்தின் திறப்பு விழா.**

அன்புடையீர்!

எமது கருணுநிதிப் படிப்பகத் திறப்புவிழா, திருவள்ளுவர் ஆண்டு 1986, ஐப்பசித் திங்கள் 3-ம் நாள் [20—10—55] வியாழன் மாலே 2-30 மணிக்கு, தோழர் பொன்னம்பலனுர் அவர்கள் தலேமையில் நடைபெறும்.

அவ்வமயம் அறிஞர் அண்ணு அவர்கள் படிப்பகத்தைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றுவார்கள்

தங்கள் வருகையை
பெரிதும் விரும்பும்,
**விழாக் குழுவினர்,**
கருணுநிதி படிப்பகம்,
திருப்பத்தூர்,
(இராமநாதபுரம்.)




# புல்கானின் பார்வைக்கு

## (1) பஞ்சசீலமல்ல, 'பாஞ்சாலிசீலம்'!

வடிவேல் விழியை வழிமேல் வைத்துக் காத்திருக்கின்றனர்.

அந்தி சாயும் நேரம்; பந்தியில் குதிரைகள் காத்திருப்பது போல் ஆரணங்குகள் அச்சடித்த பதுமைகளாய் நிற்கின்றனர்.

ஏன்?

பள்ளி சென்ற பாலகன் பந்தடித்துத் திரும்புவான்; அவனை அள்ளி அணைத்து உள்ளன்பை முத்தமாக்கி உச்சந் தலையில் தருவதற்கா?

இல்லை.

மல்லிகைப் பூவை மடியிலும், மாருத பாசத்தை இதயத்தின் அடியிலும் வைத்து, உதயத்து வர்ணத்தை அவள் இதழ்களின் ஓரத்தில் காணத் துடிக்கும் அத்தானின் வருகைக்கா?

அதுவும் இல்லை.

அவர்கள் யார் தெரியுமா?

சமுதாயச் சருக்கு நிலத்திலே வழுக்கி விழுந்த சிறுமிகள்!—பம்பாய் நகரத்தின் காமாட்டிபுரம் என்னும் பகுதியில் வெறி பிடித்த மனிதர்களின் காம தாகம் தணிக்கும் கயல்விழிக் குட்டைகள்!

நறுக்கு மீசையும், முறுக்கு நடையும் கொண்ட மைனர்கள் வருவார்கள்; வெள்ளிப் பணத்தின் பிரகாசத்திலேயே அவர்களுடைய மானத்தைத் திருடிச் செல்வார்கள்!

நரை விழுந்த முடியும், வெற்றிலைப் பாக்குக் கரைபடிந்த பல்லும் கொண்ட பக்தகோடிகள் விஜயம் செய்வார்கள்—'பரமன் அடிகளிலே உன் பாவங்கள் கழுவப் பட்டுவிடும்; நாளை அர்ச்சனைக்கு வருகிறுயா?'-என்று அழைப்பு விடுத்துச் சென்றுவிடுவர்.

வழுக்கைத் தலையுடையோர்கூட அந்த வேசிகளின் அழுக்குப் படுக்கையிலே விழுந்துபுரண்டு விரகம் தணிப்பதற்காக வந்து போவர்-நொந்த உள்ளத்திலே ஒரு வேலை விசிவிட்டு!

பம்பாய் நகரம்! பண்டித நேருவின் கிருபா கடாட்சம் அடிக்கடி பட்டுக் கொண்டிருக்கும் பட்டணம்! அவருக்கு அடுத்த வாரிசாய் பரத கண்டத்தை வரிக்கப் போகும் மொரார்ஜி தேசாயின் தர்பார் மண்டபம் அங்கே! அங்குதான் இந்த அக்ரமமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

'சிவப்பு விளக்கு'ப் பிரதேசம் என்று அதற்குப் பெயராம்! அரசாங்கத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற்ற பெண்கள் விபச்சாரம் நடத்தலாமாம்; கற்பையும் சந்தைப் பொருளைப்போல விற்பனை செய்யலாமாம்!

அகிம்சை—

சத்தியம்—

சன்மார்க்கம் — சுருங்கச் சொன்னுல் காந்தீயம்!

—இவைகளோடேதான் காமாட்டிபுரத்திலேயுள்ள காமக்கோட்டமும் காட்சியளிக்கிறது!

பஞ்சசீலக் கொள்கைபற்றி பாரெல்லாம் தெரியும். அதை வைத்தே நேரு சமாதானத் தேர் ஓட்டமுடியும் என்பதை நிரூபித்திருக்கிருர். அந்தப் பஞ்சசீலம் விளையும் பூமியிலேதான் இந்த பாஞ்சாலிகளும் சீலமுடன் வாழ்கிருர்கள்—சீழ்நாறும் சமூகத்தின் சித்ரவதைக் கூடமாக!

பம்பாய் போன்ற பெரும்பெரும் நகரங்களிலே இப்படியெல்லாம் சாக்கடைக் கும்பியைச் சேர்த்து வைத்துக் கொண்டுதான் மோதிலால் மைந்தர் ரஷ்யப் பிரதமர் புல்கானினை விருந்துக்கு அழைத்திருக்கிருர்.

ஆலையூராம் அது! அங்குதான இந்தப் 'பாலையூரும்' இருக்கிறது! இவைகளையெல்லாம் பார்வையிடுவதற்குத்தான் பாரதத்துக்கு வருகிருர் புல்கானின்! அடுத்த மாதமே அவரது சுற்றுப்பயணம் நடைபெற இருக்கிறதாம்.

புல்கானின் வரட்டும்; அவரோடு அவருடைய நிழலாம் குருஷேவும் வரட்டும்! வந்து பார்க்கட்டும், இந்த வகையற்றவர்களின் ஆட்சிமுறையை!

ரஷ்யர்கள் மாஸ்கோவில் விஜயலட்சுமியைப் பார்த்திருப்பார்கள்; நேருவுக்குப் பக்கத்திலே சிட்டுக் குருவியைப் போல 'துரு துரு'வென்று அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்த இந்திராவைப் பார்த்திருப்பார்கள். சரிதான்; பாரத பூமியிலே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ்கிருர்களாக்கும்! பெண்ணுரிமைக் கொடி பூத்துக் குலுங்கி புதுமெருகு தருகிறதாக்கும்!—என்று நினைத்திருப்பார்கள்.

இப்போது புல்கானினே நேரே இங்கு வருகிருர்.

பாரத வீரர்களே! மாஸ்கோவில் நேரு பெற்ற மாலைகளை உங்கள் கழுத்தில் தாங்கிக் கொண்டதாகக் கனவு கண்டோரே! அழைத்துச் செல்லுங்கள் அந்தப் பொதுவுடைமைப் பொறியை காமாட்டிபுரத்திற்கு! பாரீர் எமது பாரதப் பெண்களின் பண்பாட்டை! உங்கள் நாட்டிலே தாய்க்குலம் காக்கும் மாதர்மணிகள் 'டிராக்டர்' ஓட்டுகிருர்கள்; விமானத்திலேறி விண்ணிலே பறக்கிருர்கள்; எதிரியா? என் நாட்டிலா?—என்று கேள்விப்பட்டால், இராணுவ உடை அணிந்து பட்டாள வீரர்போல பணியாற்றுகிருர்கள்; கோலமிடத் தெரியாது—குவலயம் ஆளத் தெரியும்! சாணிப் பிள்ளையார் பிடிக்கத் தெரியாது-கோணிப் போன சமுதாயத்தை நிமிர்க்கத் தெரியும்! சமையல் செய்வர்; சமயம் நேர்ந்தால் சமரும் தொடுப்பர்—கணவனோடு அல்ல; கணை தொடுக்கும் பகைவன்மீது!

-இது ரஷ்ய நாட்டுப் பெண்கள் பெருமை. இதோ பாரீர்! தாய்க்குலம் நாய்க் குலத்திலும் கேவலமாயிருக்கும் நிலைமைதனை இங்கன்றி வேறு நீர் எங்கு காண முடியும்?

அசோகச் சக்கரம் அச்சு

★தொடர்ச்சி [illegible]0-ம் பக்கம்



★ பம்பாயிலுள்ள காமாட்டிபுரம் என்னும் பகுதியில் விபச்சாரத்திற்கு ஆள் பிடிப்பதற்காகக் காத்திருக்கும் வனிதையர் வரிசை!




**சென்ற இதழில்.....**

★ கிணற்றிலே ஒருதகடு அகப்படுகிறது. அதில், திருமணத் தம்பதிகளை கல்யாணமான தினத்தன்றே கொலை செய்து அந்த ரத்தத்தை கிணற்றிலே தெளித்தால், புதையல் வெடித்துக் கிளம்பும் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. திருமணத்திற்கு எந்தப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தேர்ந்தெடுப்பதென்று அம்பலம் யோசிக்கிறார்.

★ திட்டமிட்டபடி மேனகா, சாவியைத் திருடி துரையையும் குடுகுடுப்பாண்டியையும் விடுவித்து, மூவரும் தப்பி ஓடும்போது, வெள்ளியம்பலம் கத்தியை வீசுகிறார். துரையின் மீது! அதை மேனகா நெஞ்சில் தாங்கி மரணப் படுக்கையில் கிடக்கிறாள். குடுகுடுப்பாண்டி, யாரு மறியாமல் அறையில் போய் படுத்து விடுகிறான். துரை வேறொரு அறையில் அடைக்கப்படுகிறான். அம்பலத்தின் மூளை விபரீதமாகவும், வேகமாகவும் வேலை செய்யத் தொடங்குகிறது.

## 44. ஷோக் சுந்தரி !

எப்படியும் மேனகா இறந்துவிடுவாள்; அப்படி இறந்துவிட்டால், அவள் கத்தி பாய்ந்து செத்தாள் என்பது ஊரிலே பரவிவிடும். பரவிவிடுமேயானால் தான் போலீசில் சிக்கிவிட நேரிடும் — என்று அம்பலம் அச்சங்கொண்டார். அதன் காரணமாக முன் எச்சரிக்கையாகவே போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட வேண்டுமென்று முடிவு கட்டினார். வேலைக்கார ராமனை அழைத்து, பேராவூரணி போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிப்போய், மேனகா குத்தப்பட்ட செய்தியை சப்இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து வருமாறு அனுப்பினார்.

ராமன், அவரிடம் — "மேனகாவை யார் குத்தியது என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?" என்று சந்தேகம் கிளப்பினான்.

அம்பலம் சிறிது நேரம் யோசித்தார். "என்னடா என்னைக் கேட்கிறாய்? முட்டாளே! உனக்குத் தெரியாதா? அந்தக் குடுகுடுப்பைக்காரன்தானே அவளைக் கொலை செய்ய முயன்றான்! என்னிடம் வந்து கேட்கிறாயே; போலீஸ் ஸ்டேஷனில் சொல்! கொலை செய்ய முயற்சித்த குடுகுடுப்பாண்டியை இங்கே பிடித்து வைத்திருப்பதாகவும் தெரிவித்து வா!"

அம்பலம் இதைச் சொன்னதும் ராமன் விழித்தான். அவனுக்குத் தெரியும்; அம்பலம்தான் மேனகாவை மரணப் படுக்கையில் கிடத்தியிருக்கிறார் என்பது! அய்யோ, பாவம்; அந்தக் குடுகுடுப்பைக்காரன் சிக்கிக்கொண்டானே — என்ற வருத்தத்துடன் எஜமானன் உத்திரவை நிறைவேற்ற அவன் பேராவூரணியை நோக்கி ஓடினான்.

நாடியம் மடாலயத்தைத் தாண்டிச் செல்லும்போது மடாலயத்துப் பின்புறமிருந்து, "ராமா!" என்று ஒரு குரல் கேட்கவே, திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். கைகாட்டி ராமனை அருகே வருமாறு அழைத்தாள். அவனும் எதுவும் புரியாமல் அவளிடம் வந்தான். அழகான வெள்ளைச் சேலை அணிந்து—நீல நிறத் துணியினால் தலையின் பாதி பாகத்தை மூடிக்கொண்டு—முகத்தையும் மூக்குக்குக் கீழே கருப்பு சல்லாத் துணியால் மறைத்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் நெளி நெளியான கூந்தல், குதிரைக் குஞ்சம் போல சுருட்டி விடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. அவளது நெற்றியும் கண்களும் மட்டுமே தெளிவாகத் தெரிந்தன. கண்களிலேகூட கண்ணாடி அணிந்திருந்தாள் அவள்.

"என்ன ராமா; சௌக்கியமா?" என்று கேட்டுக்கொண்டே அவளும் அவனிடம் நெருங்கிவந்தாள்.

ராமன், நாணிக் கோணி நின்று, "யார் நீங்க? என்னை எப்படித் தெரியும்?" என்று கேட்டுக்கொண்டே குழைந்தான்.

"எனக்கு உன்னை நன்றாகத் தெரியுமே—நீதானே வெள்ளியம்பலத்தின் வேலைக்காரன்?" என்று கேட்டுக்கொண்டே அவள் சிரித்தாள்.

"ஆமாம்; நானேதான்! அடேடே! நீங்க யாரம்மா?"

"என்னது; என்னை அம்மான்னு கூப்பிடுறே! என்னைப் பார்த்தா ஒரு இளம் பெண்ணாத் தெரியிலியா?"

"தெரியுது; தெரியுது. ஆமாம், நீங்க யாரு? என்னை எப்படித் தெரியும்?"

"என் பெயர் ஷோக்சுந்தரி! சிலோன் தேசத்தைச் சேர்ந்தவள். நீ அம்பலத்தோடு புதுப்பட்டினம் சந்தைக்கு வரும்போது அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் நீ என்னைப்பார்த்ததில்லை. நீ அழகாக நடந்து அன்னம்போல அம்பலத்தோடு போவாய்: நான் ஒதுங்கி நின்று ஓரக்கண்ணால் பார்த்து ஏங்குவேன்!"

'ஏங்குவீங்களா? ஏன்?'

'இது புரியவில்லையா? ஒரு ஆணிடம் ஒரு பெண், இதைவிடப் பச்சையாக எப்படி விஷயத்தை வெளியிட முடியும்?"

'ஓகோகோ; புரிகிறது! ஷோக் சுந்தரி! நீ என்னை...' என்று ராமன் வார்த்தையை இழுத்தான், வலிப்பு வந்தவன் போல!

'ஆமாம் ராஜா! நான் உன்னைக் காதல் செய்கிறேன்' என்றுஅவள் பதில் கூறி நின்றாள்.

ராமன் அயர்ந்து போய்விட்டான். மெய்மறந்து நின்றான். 'என்னை நீ காதலிக்கிறாயா?' என்று அலறினான். அவனையே அவனால் நம்பமுடியவில்லை. அவளோ, அவனைப் பார்த்துக் கொண்டே, 'கண்ணாளா! என் கண்ணைக்கேளு; அது சொல்லும்! என் இருதயத்தைக் கேளு; அது சொல்லும்! எங்கே, மனந்திறந்து சம்மதங் கொடு! நாமிருவரும் நகமும் சதையும் போல வாழலாமா? சொல்லு கண்ணு!'—இப்படி விரகதாபத்தை வெளியிட ஆரம்பித்து விட்டாள் ஷோக்சுந்தரி!

'இது என்ன ஒரே ஆச்சரியமாயிருக்கு! சொப்பனம் காணுகிறேனா?'—ராமன் கண்களைக் கசக்கியபடி ஷோக்சுந்தரியை ஏற இறங்கப் பார்த்தான். வலிய வந்த அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். 'ஆகா! எனக்காக ஒரு பெண்மணி இவ்வளவு நாட்களாகத் தவமிருந்திருக்கிறாளே!' என்று தன்னைப்பற்றித் தானே புகழ்ந்து கொண்டான். அவளது கரங்களை மெதுவாகப் பற்றினான்.

அவளும் அவனை அன்போடு பார்த்து, நாணிக்கோணி நின்றாள். 'சத்தியம் செய்து கொடுங்கள்; திருமணம் செய்து கொள்வதாக!' என்று கட்டாயப்படுத்தினாள்.

'ஆயிரம் சத்தியம் செய்து கொடுக்கிறேன்!' என்று அவளது கையிலே அடித்துக் கொடுத்தான் ராமன்.

'அப்பாடா! என் ஜென்மம் சாபல்யம் அடைந்தது' என்று பெருமூச்சு விட்டாள். அவளோடு அந்த மடத்தடியிலேயே இருக்க வேண்டும்போல் தோன்றியது ராமனுக்கு !

ஆனாலும் எஜமானனின் கட்டளையை அவனால் மறக்கமுடியவில்லை. அவளிடம் விடைபெற்றுக் கொள்வதற்குத் தவியாய்த் தவித்தான். அவளோ ராமனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். 'பரிமளா எங்கேயிருக்கிறாள்?' என்று அவள் கேட்டதும், ராமனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'அடேடே! அதுகூட உனக்குத் தெரியுமா? எப்படித் தெரியும்?' என்று அதிர்ச்சியோடு கேட்டான் அவன்.

'எனக்கு உன்னைப் பற்றி விசாரிப்பதேதான் வேலை. அப்படி விசாரிக்கும்போது, பரிமளா என்ற ஒரு பெண்ணை, உங்க எஜமானன் அடைத்து வைத்திருப்பதாக கேள்விப்பட்டேன் கண்ணாளா!' என்று செல்லமாகச் சிணுங்கிக் கொண்டே பேசினாள்.

'அந்தப் பரிமளா ஒரு நாள் என்னையும் ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டாள். இப்போது அந்த துரையைக் கொணடுவந்து அடைத்து வைத்திருக்கிறோம்' என்று வீரப்பிரதாபத்தோடு செய்தியை வெளியிட்டுக் கொண்டே அவளது கன்னத்தைக் கிள்ளுவதற்காக முயன்றான். அவள் நல்ல உயரமாக இருந்ததாலும், ராமன் சரியான குள்ளமான படியாலும் அவனுக்கு அவள் கன்னம் எட்டவில்லை. உதவிக்கு ஒரு கல்மீது ஏறிக் கொண்டான்.

துரை அடைபட்டிருப்பதைக் கேள்வியுற்ற ஷோக் சுந்தரியின் முகம் மாறிற்று. அந்தத் திடீர் மாறுதலை ராமன் கவனிக்கவில்லை. அவன்தான் காதல் போதையில் கட்டுண்டு தவிக்கிறானே; பாபம்! துரை எப்படி அடைபட்டான்; எதற்காக அடைபட்டான்?—என் பவைகளை எல்லாம் அவன் ராமனைக் கிண்டிக் கிண்டிக் கேட்டாள். புதிய போதையில் ஆழ்ந்து கிடந்த அவன், காரணங்கள் எதுவும் சரியாகத் தெரியாது

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

என்று உளறியதே... மேனகாவை அம்பலம் வெட்டிவிட்டு, அந்தப் பழியை ஒரு குடுகுடுப்பைக்காரன்மீது போடப் போவதையும், அதற்காகவே தான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதையும் அவளிடம் கூறினான். ஷோக் சுந்தரி, ராமனின் மடியில் சாய்ந்தபடியே அவனிடமிருந்து துரை பற்றியும்—மேனகா, குடுகுடுப்பைக்காரன்பற்றியும் ஓரளவு விஷயங்களைத் தெரிந்து கொண்டாள்.

ராமனோ, அவள் யார்? திடீரென்று தன்மீது பிரியங் காட்டக் காரணம் என்ன?—என்பவைகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட நேரமின்றி ஒடிந்து கிடந்தான். வலுவிலே கிடைத்த வாய்ப்பை இழக்க அந்த வாலிபனுக்கு மனமில்லை யென்றாலுங்கூட, எஜமானனின் கட்டளைப்படி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக நேரமாகிவிட்டதை உணர்ந்து அவளிடம் விடை கேட்டான்.

அவளோ ஊடல் புரிந்து நின்றாள். 'நீங்கள் பிரிகிறீர்கள். எனக்கு அழுகை தாங்க முடியவில்லை' என்று கூறிக் கொண்டே, அவள் தன் கண்ணாடியைக் கழற்றி, அதைக் கைக் குட்டையால் துடைத்து மீண்டும் அணிந்து கொண்டாள். நாளைய தினம் அவசியம் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு பிரியாமல் பிரிந்தான் ராமன். அவன் போகும் வரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ஷோக் சுந்தரி நாடியத்திலிருந்து மருங்கப்பள்ளம் செல்லும் மார்க்கமாக நடக்க ஆரம்பித்தாள்.

'துரையை அடைத்து விட்டான் துரோகிப் பயல்! துரையை விடுவித்தே தீருவேன்' என்று அவளது வாய் முணுமுணுத்தபடியிருந்தது. கால்கள் அம்பலத்தின் வீடு நோக்கிப் பறந்தன.

★

மேனகாவின் சாவை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்பலம், வெளிப்புற திண்ணையிலே உட்கார்ந்திருந்தார். அவருக்கெதிரே ஷோக் சுந்தரி போய் நின்றாள். அவர் கேட்பதற்கு முன்பாகவே அவள், தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டாள். சிலோனிலிருந்து வந்துள்ள அனாதை யென்றும், பெரிய தர்ம தாதாவாகிய வெள்ளியம்பலம் ஏதாவது உதவி செய்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் அவள் பணிவோடு கூறினாள். 'நீங்கள்தான் இருண்டு போன என் வாழ்வுக்கு ஒளி தர வேண்டும்' என்று மன்றாடினாள்.

அவளது வரலாறு முழுவதையும் கேட்ட அம்பலம், கடைசியாக, ஏதோ சிந்தித்தவராக, 'உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?' என்று கேட்டார்.

'இதுவரையில் இல்லை. நீங்களே செய்து கொண்டாலும் சரி!' என்று சொல்லிவிட்டு, அவள் அவரைப் பார்த்துவெட்கப்பட்டு தலை குனிந்து நின்றாள், பூமியைக் கால் விரலால் பிராண்டியபடி!

ஷோக்சுந்தரி திருமணமாகாதவள் என்று கேட்ட மாத்திரத்தில் அம்பலத்திற்கு ஆனந்தம் ஏற்பட்டது. புதையல் எடுக்க எல்லாக் காரியங்களும் கைகூடி வருகின்றன என்று பூரிப்படைந்தார். மேனகாவின் சாவைத்தவிர்க்கவே முடியாது. எப்படியும் செத்து விடுவாள். கொலைக் குற்றத்தை சுமக்க குடுகுடுப்பைக்காரன் இருக்கிறான். இதோ, ஒரு ஷோக் சுந்தரி கிடைத்துவிட்டாள். இவளைத் துரைக்குத் திருமணம் செய்வித்து புதையலுக்குத்தேவையான பலியைக் கொடுத்துவிடலாம். நெடுநாளைய கனவும்பலித்துவிடும். பிறகு மாயாண்டிக்கிழவன் ஒருவன்தான் பாக்கி! அவனையும் புதையல் கிடைத்த பிறகு சமாதி செய்துவிட்டால் எல்லாத் தங்கங்களுக்கும் நானே ராஜாவாகி விடுவேன்—இப்படியெல்லாம்ஆசைக் கோட்டைகளும், சதி மாளிகைகளும் உருவாயின அம்பலத்தின் மூளையில்! ஷோக்சுந்தரியிடம் தந்திரமாகப் பேசி, அவளையும் அறையிலே போட்டுப் பூட்டிவிட்டால், இன்னும் ஓரிரு நாட்களில் திருமணத்தை நடத்தி, எல்லாவற்றையும் முடித்துவிடலாம் என்று கருதினார்.

'நீ பத்திரமாக இங்கேயே இரு! பாதுகாப்பாக உன்னை ஒரு அறையில் வைத்திருக்கிறேன். சில நாட்களுக்குள் உனக்கு ஒரு நல்லமாப்பிள்ளையைத் திருமணம் செய்வித்து, உனக்குத் தேவையான வசதிகளைச் செய்கிறேன். உன்னைப் போலத் திக்கற்றவர்களுக்கு உபகாரம் செய்வதுதானம்மா என் வேலை!' என்று அவளிடத்திலே உபசார மொழிகள் பேசினார்.

ஷோக்சுந்தரியும் அம்பலத்திற்கு நன்றி கூறி நின்றாள். அவளை அழைத்துக் கொண்டு அம்பலம் வீட்டுக்குள்ளே போய், 'இங்கே ஒரு அறையில் உன்னைப் பத்திரமாக வைக்கப் போகிறேன். எதற்கும் பயப்படாதே!' என்று கூறிவிட்டு, துரையின் அறையைத் திறக்கப் போனார். பிறகு என்னவோ நினைத்துக் கொண்டு, அந்த அறையைத் திறக்காமல், ஷோக் சுந்தரியை மலையாள பகவதியிருக்கும் அறையிலே விட்டு கதவைப் பூட்டிக் கொண்டார். ஷோக் சுந்தரிக்கு எதுவும் புரியவில்லை. விழித்தாள். 'அறையைப் பூட்டுவதற்காகப் பயப்படாதே! உனக்கு நல்லகாலம் வரப்போகிறது'என்று சமாதானம் சொல்லியபடி அம்பலம் அதைவிட்டு அகன்றார்.

ஷோக்சுந்தரியைக் கண்ட குடுகுடுப்பாண்டி, நீண்டதொருபெருமூச்சுடன் வேறிடம் போய் உட்கார்ந்து கொண்டான். ஷோக் சுந்தரியும் குடுகுடுப்பாண்டியை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, இன்னொரு பக்கம் போய் ஜன்னலண்டை அமர்ந்து கொண்டாள். அய்யோ, பாவம்—இந்தக் குடுகுடுப்பாண்டிக்குத்தான் ஆபத்து வரப் போகிறது! பொய்க் குற்றம் சாட்டி போலீசில் ஒப்புவிக்கப் போகிறார் அம்பலம்—என்று எண்ணியவாறு ஜன்னல் கம்பிகளைத் தடவிக் கொண்டிருந்தாள் ஷோக்!

புதையலுக்குக் காவு தயாராகிவிட்டது என்ற களிப்புடன் அம்பலம், மாயாண்டிக் கிழவரிடம் ஓடோடி வந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

'கிழவரே! நாம் தேடி அலையும் திரவியம், தேடாமல் வரும் அதிர்ஷ்டத்தால் திண்ணமாகக் கிடைக்கப் போகிறது!' என்று கூவினார்.

போலீஸ் ஸ்டேஷனில் இருந்து திரும்பிய ராமன், செய்தி சொல்ல வந்து—அவர் மாயாண்டியிடம் பேசிக் கொண்டிருப்பதை ஒளிந்திருந்து கேட்க ஆரம்பித்தான்.

'ஷோக் சுந்தரி என்று ஒரு பெண் அகப்பட்டாள். கன்னி கழியாதவள். அவளுக்குத் திருமணம் செய்வித்து சௌகரியங்கள் செய்வதாக வாக்களித்து பூட்டி வைத்திருக்கிறேன். எங்கும் ஓடிவிடாமல்! தகட்டில் இருக்கிறபடி அவளுக்கு ஒரு மாப்பிள்ளை தேடி திருமணம் செய்வித்து, உடனே கொலை செய்து நமது பலியை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.'

அதைக் கேட்ட மாயாண்டி, 'மாப்பிள்ளைக்கு யாரைப் பிடிப்பது?' என்று கேட்டார்.

'ஓகோ, கிழவரே! இதுவரையில் நான் சொல்லவில்லை யல்லவா? துரை ஓடிப் போனான் என்றீரே; அவனை நான்தான் அடைத்து வைத்திருக்கிறேன்.'

'அப்படியா?'

'ஆமாம். புதையல் ரகசியம் அவனுக்கும் தெரியுமல்லவா? அதனால்தான் அவனைப் பிடித்துப் போட்டிருக்கிறேன். இப்போது அது ஒரு நல்லதாகவே போய் விட்டது.'

'ஆமாம்! உண்மைதான் அம்பலம்! துரையைத் தீர்த்துக் கட்டிவிட்டால், புதையலை நாம் இருவருமே பங்கு போட்டுக் கொள்ளலாம். ஆனால் ஒன்று; அந்தப் பயல் துரை, பரிமளாவைத் தானே திருமணம் செய்து கொள்வேன் என்பான்.'

'அவள்தான் கிடைக்கவில்லையே, என்ன செய்வது? துரைக்கும் ஷோக் சுந்தரிக்கும் கட்டாயக் கல்யாணம் செய்து, காவு கொடுக்க வேண்டியதுதான்.'

அம்பலத்தின் முடிவைக் கேட்டு கிழவர் மௌனமாக இருந்தார். அம்பலத்தின் பேச்சைக் கேட்ட ராமன், தவியாய்த் தவித்தான். துடித்தான். துவண்டான். ஷோக் சுந்தரி அம்பலத்திடம் அகப்பட்டுக் கொண்டதையும், அவளை பலியிடப் போவதையும் கேட்டு கண்ணீர் விட்டான். அம்பலத்தின்மீது அவனுக்கு அடங்காத கோபம் பிறந்தது. கோபத்தை அவரிடம் காட்டி என்ன செய்வதென்று வருந்தினான். தனது அருமைக் காதலிக்கு இவ்வளவு அவசரமாக ஆபத்து வந்து விட்டதேயென்று அழுதான்.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அம்பலத்திடம் வந்து, போலீஸ் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர் இல்லை என்றும், வந்ததும் உடனே வருவார்கள் என்றும் கூறிவிட்டுத் துக்கம் தொண்டையை அடைக்க அதை விட்டு நகர்ந்தான். வீட்டின் ஒரு மூலையிலே உட்கார்ந்துகொண்டு தி[ல]ர்க் காதலியை நினைத்து தேம்பித் தேம்பி அழுதான். 'கோ'வெனக் கத்தினான். அவளைப் பூட்டியிருக்கும் அறையின் பக்கமாக சோகநடை போட்டுப் போனான்.

ஷோக், ஜன்னலண்டை உட்கார்ந்திருந்தாள். அவளிடத்திலே சென்று இவ்வளவு ஆபத்தான செய்தியை எப்படி வெளியிடுவது என்று யோசித்தான். அவளிடம் செல்ல மனமின்றி, மெதுவாக இன்னொரு ஜன்னல் பக்கம் வந்தான். அங்கே குடுகுடுப்பைக்காரன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். அவன் மூலமாகத் தன் காதலியிடம் வரப்போகும் ஆபத்தை அறிவிக்கலாமென்று தீர்மானித்துக் கொண்டான். குடுகுடுப்பைக்காரனிடம் நெருங்கி, 'ஏ,பகவதி சாயபு! எனக்கு ஒரு உபகாரம் பண்ணுவாயா?' என்று கெஞ்சினான்.

பகவதி வேடத்திலிருக்கும் பரிமளாவும், ராமனால் ஏதாவது உதவி ஏற்படலாம் என்று எண்ணியவளாய், 'என்ன வேண்டும்?' என்று ராமனைக் கேட்டாள்.

ராமன் கண் கலங்கியபடி பேசினான்: 'அதோ உட்கார்ந்திருக்கிறாளே; ஷோக் சுந்தரி—அவள் என்னுடைய பிரிய சிநேகிதி! நானும் அவளும் உசிருக்கு உசிரு! அவளுக்கு என் எஜமானனால் பெரிய ஆபத்து வரப்போவுது! அதாவது, துரை என்கிறவனுக்கும் இவளுக்கும் கல்யாணம் செய்துவைத்து, இரண்டுபேரையும் உடனே கொலைசெய்து பலிகொடுத்து புதையல் எடுக்கப் போகிறாராம். அந்த ஆபத்திலேயிருந்து என் காதலி ஷோக் சுந்தரியைக் காப்பாத்தணும். இந்த விஷயத்தை நீயே அவளுகிட்ட சொல்லிவிடுகிறாயா பகவதி?'என்று கெஞ்சினான் ராமன்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பகவதிக்கு நெஞ்சு நடுக்கமெடுத்தது. தன் காதலன் துரை, இனி மேல் தப்பமுடியாது என்பதை அறிந்து அனலிடை மெழுகாக உருகிற்று அவள் உள்ளம். துரையோடு சேர்ந்து தானும் சாக விரும்பினாள்.

ராமனிடம் ஆறுதல் கூறி அனுப்பிவிட்டு, ஒரு மூலையிலே விழுந்து கண்ணீர் வடித்தாள். குடுகுடுப்பைக்காரன் அழுவதை ஷோக் சுந்தரி கவலையோடு கவனித்தாள். அம்பலத்தின் மனைவியைக் குத்திவிட்ட குற்றத்திற்குக் குடுகுடுப்பைக்காரன் ஆளாக வேண்டுமே, அதற்காக அழுகிறான் போலும்—எனக் கருதினாள் ஷோக் சுந்தரி!

துரையோடு தானும்பலிகொடுக்கப்பட வேண்டும் என்கிற ஆசை யாவது நிறைவேறினால் போதும்—என்று தனக்குள்ளே புலம்பிக் கொண்டாள், பரிமளா! எங்கிருந்தோ வந்த ஷோக் சுந்தரிக்குக் கிடைக்கும் பாக்கியம் தனக்குக் கிடைக்கக்கூடாதா என்று ஏங்கினாள். அதே சமயம் அவளுக்கு ஷோக் சுந்தரியின்மீதும் அனுதாபமும் பரிவும் ஏற்பட்டது. எதுவுமறியாத ஒரு அசட்டுப் பெண், ஆசைக்கார காண்டாமிருகத்தின் கையால் சாக வேண்டியிருக்கிறதே யென்று வருந்தினாள். ராமன் சொன்ன விஷயத்தை அவளிடம் ஜாடையாகவாவது சொல்லிவிடலாம் என்று கருதி அவள் பக்கம் போனாள்.

'என்னப்பா சாயபு! ஏன் வருத்தமாயிருக்கிறாய்?' என்று கேட்டாள் ஷோக்!

அதற்குப் பரிமளா பதில் சொல்லாமல், 'சாயபு உனக்கு ஒரு ஜோஸ்யம் சொல்லப் போறான்; ஜோஸ்யம் சொல்லப் போறான்.' என்றாள் பரிமளா.

'என்ன ஜோஸ்யம்?' என்றாள் ஷோக்.

'உனக்கு ராமன்னுஒரு நாயகன் இருக்கான்'

'ஓகோ, சரிதான்! அதிருக்கட்டும் சாயபு! நீ பெரிய ஜோஸ்யம் சொல்றவங்கிறியே—நான் ஒண்ணு கேக்கிறேன் பதில் சொல்லு! நான் ஆணா? பெண்ணா? சொல்லு பார்ப்போம்!' என்று கேட்டாள் சுந்தரி.

'இது தெரியாதா? நீ ஒரு பெண் பிள்ளைன்னு பகிரங்கமாத் தெரியுதே!' என்று குடுகுடுப்பைக்காரன் நையாண்டி செய்தான்.

'பெண்ணா நான் — அதான் இல்லை' என்று சிரித்தபடி முக்காட்டை விலக்கினாள் ஷோக் சுந்தரி. மளமளவென்று உடையைக் கழற்றினாள். பரிமளா திகைத்தாள்.

[வளரும்]

## கொள்ளைக்காரன்....

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டி வைத்தனர். அசைந்தால், அந்த அழுக்குச்சிலை எப்படி துப்பாக்கி குண்டுகளால் தூளாக்கப்படும் என்று அத்துப்பாக்கி எச்சரித்தது.

பெஸ், சாலையை நோக்கினாள். பயங்கரமான மயான அமைதி எங்கும் நிலவியிருந்தது. காதலன் வருகை காணுது தத்தளித்த அவள் உள்ளம், இப்பொழுது அவன் வந்துவிடுவானே என்று கிலி கொண்டது.

"நாளை இரவு, கட்டாயம், அண்டசராசரமும் எதிர்த்து நின்றாலும் அத்தனையும் தூளாக்கி, உன் கரங்களில் வந்து சேர்ந்து விடுவேன்"—கடைசியாக அவன் கூறிச்சென்ற அந்த வார்த்தைகள் மரண கீதமாக அவள் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருந்தது!

ஜாக் இல்லாத வாழ்க்கை தானே அவளுக்கு மரணம்—ஜாக் வாழ அவள் சாவது தானே அவளுக்கு வாழ்க்கை? இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி அவளுக்குச் சந்தேகமே ஏற்படவில்லை.

இரையின் வரவுக்காகப் புதரருகே காத்திருக்கும் நரியைப் போல, கொள்ளைக்காரன் ஜாக்கின் வரவுக்காகப் போர்வீரர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள்.

இரவு நகர்ந்து கொண்டேயிருந்தது! போர் வீரர்களும் நித்ராதேவியின் அணைப்பில் மெதுவாக வீழ்ந்தனர். பின்புறம் கட்டியிருந்த கரங்களைத் திருகித் திருகி கட்டவிழ்க்க பெஸ் முயன்றாள். பொன்னிறக் கரங்களில் சிவப்புத் தாரைகள் வழிந்தன.

போர்வீரர்கள் தூங்கிக் கொண்டே இருந்தார்கள்!

பெஸ், கரங்களைத் திருகிக் கொண்டே இருந்தாள். முடிவில் வெற்றிபெற்றேவிட்டாள். அவளுடைய விரல்கள் துப்பாக்கியை வெடிக்க வைக்கும் துப்பாக்கியின் வில்லில் சென்று படிந்தன.

அதற்குமேல் அவள் ஏதும் விரும்பவில்லை. துப்பாக்கியின் முனை அவள் மார்புக்கு நேராக நின்றது. சற்று தலையை நிமிர்ந்து பார்த்தாள். பரந்து நீண்ட அந்த சாலை வெள்ளி நாடா போல் தோற்றமளித்தது.

போர் வீரர்கள் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தனர்!

'டக், டக்...டக், டக்'

தூரத்தில் பாய்ந்துவரும் குதிரையின் குளம்போசை, அமைதியான அந்த நள்ளிரவில் பயங்கரமாகக் கேட்டது.

பெஸ்ஸின் இதயம் படபடத்தது. மரணத்தின் வாயிலை நோக்கி, உள்ளத்தில் உவகை பொங்க, காதலியைக் காணும் ஆசையால் விரைந்து வரும் அவன்...?

ஐயோ, இந்தப் போர்வீரர்களுககுக் காது கேட்காமலே போய்விடக் கூடாதா? இதோ சாலையை நெருங்கி அவன் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கிறான்... அவனை வழியில்சென்று எச்சரிக்க எவருமே இல்லையா? காதலியோடு சல்லாபிக்கவரும் அவன், காலன் உருவில் வந்திருக்கும் போர்வீரர்களையல்லவா சந்திக்கப் போகிறான்.

மாளிகையை நெருங்கியே விட்டான் ஜாக்! போர்வீரர்களும் விழித்துக்கொண்டு விட்டார்கள். துப்பாக்கியை தோளிலே சாய்த்துத் தயாரானார்கள் போர்வீரர்கள்.

புழுவெனத் துடித்தாள் பெஸ். காதலனை கடைசித் தடவையாக, இருவிழிகளால் தழுவி மனத்தால் உண்டாள். தாமதிக்க இனி நேரமேது? வில்லை அழுத்தினாள்; துப்பாக்கி வெடித்தது.

வெடிச் சத்தம் கேட்ட ஜாக், அபாயம் காத்திருப்பதை உணர்ந்து குதிரையைத் திருப்பிக்கொண்டு, வேகமாக வந்த வழியே புறப்பட்டான்.

காதலன் எச்சரிக்கை பெற்றான். காதலியோ, கோலத் திருமேனியை குண்டு துளைக்கப் பிணமானாள்! அவள் தியாகம் அவனைக் காப்பாற்றியது!

✱

காதலனைக் காப்பாற்றச் செய்த தியாகத்தால், காதல் உலகுக்கு பெஸ் ஓர் கலங்கரை விளக்கம் ஆகிவிட்டாள் என்ற செய்தி காலையில் நாடெங்கும் பரவியது! தன் மார்போடு இறுகப் புல்லிக்கிடந்த மெல்லுடல், தன்னைக் காப்பாற்றவே பிணமாகச் சாய்ந்தது என்ற உண்மையைக் காலையில்தான் ஜாக் அறிந்தான்.

கேட்டது வெறும் வெடிச் சத்தமல்ல; தன்னுடைய காதல் வாழ்க்கையையே தகர்த்தெறிந்த மரணவோசை என்பதை அவன் அறிந்தபோது...!

—அவன் உன்மத்தனானான். அவ்வடிவழகியின் பிணத்தைத் தாங்கி நிற்கும் பளிங்கு மாளிகையை நோக்கி விரைந்தான்.

பெஸ் பிணமானபின் அவன் நடைப் பிணம்தானே? பொன், பொருள், புகழ்—எல்லாம் அவனுக்கு இனி அர்த்தமற்றவை. புழுதி மண்டலத்தைக் கிளப்பிக்கொண்டே, அவன் குதிரை பளிங்கு மாளிகையை நெருங்கியது.

மீண்டும் துப்பாக்கிகள் முழங்கின. அரசனின் போர் வீரர்கள் நாயைச் சுடுவது போல அவனைச் சுட்டு வீழ்த்தினர்.

பெண்மையின் தன்மையும், காதலின் மகிமையும் அறியாத அந்தக் கபோதிப் போர் வீரர்கள், தங்களின் மிருகத் தனமான நடத்தையால் காதல் காவிய நூலுக்குப் புது ஏடு ஒன்று சேர்த்தனர்!

வாழ்கின்ற காலத்தில் அவர்களைச் சேரவொட்டாமல் தடுத்த வஞ்சகர்களுக்குக்கூட, மரணத்துக்குப்பின் அவர்கள் இணைந்து 'வாழட்டும்' என்ற நல்லெண்ணத்தோடு, ஓரே கல்லறையில் அவர்களை வைத்து அடக்கம் செய்யும் அளவுக்கு மனிதப் பண்பு இருந்தது!

[ஆங்கில நாடோடிப் பாடல் ஒன்றில் காணப்படும் கதைக் குறிப்பினைக் கொண்டு எழுதப் பட்டது.]




### தீண்டாமை ஒழிந்ததா?

சங்கரன் கோவில்
4-10-55

அன்புடையீர்,

இங்கும், அண்மையில் உள்ள சில உணவருந்தும் ஓட்டல்களிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களைத் தனியாக ஒதுங்கிய இடத்தில் உட்காரச்சொல்லி, தனியாகக் கீழே தரையில் உணவு அளித்து, தனியாக உள்ள டம்ளர்களில் தண்ணீர் கொடுக்கும் கோரக் காட்சியை கண்கூடாகக் காண்கிறோம்.

ஆனால் வானொலியிலும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும் 'தீண்டாமை'யைப் பற்றிக் கடனுக்கு வாய் கிழியக் கத்த மட்டுமே கற்றுக் கொண்ட நமது அமைச்சர் முகாம், அந்தக் காட்சியைக் காண முடியாதுதான்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பரமேசுவரனை அறநிலைய பாதுகாப்பு அமைச்சராக—கக்கனைத் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவராக—சிவசண்முகத்தை மத்திய பொதுத் தேர்வுக் கமிஷன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்து விட்டால் மட்டும் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று கருதும் நமது அமைச்சர்கள், அதற்கு ஆவன செய்வார்களா? ஆவன செய்வார்கள் நமது அமைச்சர்கள் என்று எதிர்பார்ப்பது பைத்தியக்காரனிடம் பகுத்தறிவை எதிர்பார்ப்பதற்கு ஒப்பாகும். இந்நிலை நீங்க வேண்டுமானால், நாம் கோரும் திருவிடம் தனியாகப் பிரிந்துதான் தீரவேண்டும்.

அன்பன்,
எம். செல்லப்பா.

### அரசியல் பச்சோந்திகள்!

சத்திரப்பட்டி
28—9—55

அன்புள்ள ஆசிரியருக்கு,

1954-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 15-ம்நாள்!

அன்று சுதந்திர தினம்!

சத்திரப்பட்டி (இராமநாதபுரம்) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கக் கட்டிடத்தில் தேசியக் கொடி ஏற்றுவிக்கப் பட்டது: பெரும்பான்மையான உறுப்பினர்களின் முயற்சியால்!

கட்டிடத்தின் சொந்தக்காரர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்!

ஆனால், மிகச் சிறிய அளவு அங்கம் வகித்த கம்யூனிஸ்ட்டு தோழர்கள், தேசியக் கொடி ஏற்றி வைக்கப் பட்டதை மறுத்து—"கொடியை இறக்கியாக வேண்டும்; இது சகல கட்சிக்காரர்களும் அங்கம் வகிக்கும் சங்கமாகும்; தனிப்பட்ட—காங்கிரஸ்—கட்சிக்காரர்கள் தங்கள் கொடியை ஏற்றுவித்திருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது" — என்று வாதாடினார்கள்.

கட்டிடத்தின் சொந்தக்காரரும், சங்கத்தின் முக்கியஸ்தருமான காங்கிரஸ் பிரமுகர், "இன்று நாங்கள் ஏற்றும் கொடியை இறக்க வேண்டும் என்கிறீர்கள்; நாளை, தி. மு. கழகத்தார் பழனியாண்டவர் சிலையை (சங்கத்தின் மூன்றாவது மாடியில் பார்வையாகச் செய்து வைக்கப் பட்டிருப்பது) தேவையில்லையென்று விளக்கம் கூறி, எடுக்க வேண்டுமென்று வாதாடுவார்களே... அவர்களது சொல்லையும் கேட்டு சிலையை உடைத்து எடுத்து விடுவதென்றால்...கட்டிடமே பொதுச் சொத்து என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? ஏற்றியது ஏற்றியதுதான்; இனி இறக்க முடியாது. சம்மதமில்லையென்றால் வெளியேறிக் கொள்ளுங்கள்!"—என்று ஒரே அடியாக முடித்து விட்டார்.

இதை விடத் தோல்வி, அதுவரை அங்கு கண்டறியாத கம்யூனிஸ்ட் தோழர்கள், முகங்கோணினர் என்பதுதான்!

இந்த விவாதத்தைத்துவக்கியோரும், இறுதிவரை தம் இலட்சியத்தை ஈடேற்ற முடியாது தோல்வியை அணைத்துக் கொண்டோரும், சத்திரப்பட்டி கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தூண்களாகிய அத்தோழர்கள்தான். அன்று கை.நெ.கூ.உ.வி. சங்கத்தில் சாதாரண உறுப்பினர்கள். இன்றோ......அவர்களில் ஒருவர் உதவித் தலைவர்!

வழக்கம் போல அன்று 1955-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், 15-ம் நாள்! காலை 5 மணிக்கெல்லாம், கை. நெ. கூ. உ. வி. சங்கக் கட்டிடத்தின் மூன்றாவது மாடியில்—சுதந்திர தின விழாக் கொடி — தேசியக் கொடி ஏற்றப்பட்டது...! யாரால்......?

உறுப்பினராக இருந்தபோது எதிர்த்து, அவர்கள் தலைவராக வந்தவுடன் ஏற்றிப் போற்றிப் புகழுரை வழங்குகிறார்களே, அந்த கம்யூனிஸ்ட் தோழர்கள்தான்!

உண்மைதான்; ஆச்சரியமில்லை!

இந் நேரத்தில்தான் அறிஞர் அண்ணா சொன்னது நினைவுக்கு வருகிறது.

—ஜூலை மாதம் 'நேரு ஒழிக' என்பார்கள்!

ஆகஸ்ட் மாதம் 'நேரு வாழ்க' என்பார்கள்! அவர்கள் போக்கே அலாதிதான்!

அன்பன்,
சி. பி. அண்ணாமலை.

# கமிஷன் கிளப்பியிருக்கும் குமுறல்!

★★ 'புலி வருகிறது: புலி வருகிறது' என்று வேடிக்கையாகச் சொல்லப்போய் கடைசியில் ஒருநாள் உண்மையாகவே புலி வந்துவிட்ட கதையைப் போல் ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் நீண்ட நாளைக்குப் பிறகு தன்னுடைய 'ரிப்போர்ட்'டை சென்ற கிழமை அளித்திருக்கிறது.

★ கமிஷனில் அங்கம் வகிப்போரில் அனைவரும் மொழி வழி மாநிலங்கள் பிரிவதில் பிரியமில்லாதவர்கள். பல இடங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்கள் அமைவதில் தங்களுக்குள்ள வெறுப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரோ மலையாள நாட்டைச் சார்ந்த பணிக்கர். குருடர்களை அழகுப் போட்டியின் நீதிபதியாக நியமித்திருப்பதுபோல் இவர்களிடம் மாநிலங்கள் பிரிப்பதை ஒப்புவித்திருக்கிறார்களே; இது எப்படி ஒத்து வரும்? — என்று சந்தேகப்பட்டவர்களும் உண்டு!

★ எப்படியோ கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பித்துவிட்டது. தென்னகத்தை அதன் மக்கள் விரும்பியதைப் போலவே மொழிவழியாகப் பிரித்திருக்கின்றனர், ஒரு சில குறைகளோடு! ஆனால் வட நாட்டில் மாகாணப் பிரிவினைகள் மொழியின் அடிப்படையில் உருவாகவில்லை.

★★ இருபத்தேழு ராஜ்யங்கள் பதினாறாகக் குறுகிய போதுங்கூட, அந்தந்த மொழி பேசுவோரிடையே கிளம்பியிருக்கும் புயல் அடங்கவில்லை.

★ ஹைதராபாத் துண்டாடப்பட்டு விட்டது. அதன் பகுதிகள் பக்கத்து மாகாணங்களுடன் சேர்க்கப்பட இருக்கின்றன. இந்த ஏற்பாட்டை ஹைதராபாத் மக்கள் வரவேற்ற போதுகூட, விசால ஆந்திரம் கேட்ட தெலுங்கர்களுக்கு வேதனை அளித்திருக்கிறது. 'சென்னை தமிழர்களுக்கு என்பது முடிந்த முடிவாமே'—என்று கேட்டு நீலிக் கண்ணீர் வடித்திருக்கிறார் தென்னேட்டி விசுவநாதன்!

★ மைசூரை கர்நாடக மாகாணத்துடன் சேர்த்தது அங்குள்ள மக்களுக்குப் பிடிக்கவில்லையாம். அக்டோபர் 10-ம் தேதி யன்று 'மைசூர் மைசூராகவே இருக்க வேண்டும்' என்ற கோஷத்தோடு சுமார் பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் மைசூர் சட்டசபைக்கு முன்னர் ஆர்பாட்டம் செய்தார்களாம்.

★ கமிஷன் ரிப்போர்ட்டைப் படித்துவிட்டு தான் ஆச்சரியப்படுவதாக நேரு தெரிவித்தாராம். உண்மையிலேயே அவரைப்போலவே பஞ்சாபியரும் ஆச்சரியமடைந்ததோடு அல்லாமல், அதிர்ச்சியும் பெற்றிருக்கிறார்கள். பஞ்சாபைப் பிரிக்காவிட்டால் வரிகொடா இயக்கம் துவங்கப் போவதாக சீக்கிய சிங்கம் தாராசிங் கோரினார். ஆனால் இப்போது பஞ்சாப் பிரிக்கப்படவில்லை. இப்போது அதனுடன் பெப்சுவையும், இமாசலப் பிரதேசத்தையும் இணைத்து ஒரு மாபெரும் இரத்தக் களரி ஏற்பட்ட வழி கோலி யிருக்கின்றனர்.

★★ மொத்தத்தில் கமிஷன் ரிப்போர்ட் மொழிவழியில்

★ மராட்டி மொழிக்காரர்கள் நீண்ட காலமாகவே தனி மாகாணம் கோரி வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கென தனி மாநிலம் வழங்கப்படவில்லை. மராட்டிய மக்களை பம்பாயோடு பிணைத்து கொடுமை செய்துவிட்டது, கமிஷன்! 'சம்யுக்த மகாராஷ்டிரம்' கேட்டு அவர்கள் சமர் தொடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்களாம்!

மாநிலம் பூரணமாகப் பிரிவினை செய்ய வேண்டுமென்று கோரியவர்களைத் திருப்தி படுத்தவில்லை.

கொதிப்படைந்துள்ள மக்களை திருப்தி செய்யாவிட்டால், அடுத்த பொதுத் தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி கலகலத்து விடுமோ—என்று சிலர் கலக்கமடைவதாகவும் தெரிகிறது.

★

# சுப்ரமணியனுர் சிந்தனைக்கு!

குருநாதரை மூட்டை கட்டி குருகுலத்துக்கே அனுப்பி விட்ட காரணத்தாலோ என்னவோ; இப்போதெல்லாம் கோவைக் கிழார் சுப்ரமணியனுர் நாலாந்தர நடையில் நம்மைத் தூற்றுவதையே தன் தொழிலாகக் கொண்டிருக்கிறார்!

கோவையிலே அவர் திராவிட இயக்கத்தவர்மீது வசைமாரி பொழிந்தபோது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"காமராஜரும் நானும் அவர்கள் கட்சியில் (திராவிட இயக்கத்தில்) சேர்ந்திருந்தால் மந்திரிகளாகியிருக்க முடியாது. காங்கிரசில் சேர்ந்ததால்தான் இந்தப் பதவி வகிக்க முடிந்தது!"

—இதுதான் சுப்ரமணியனுர் மந்திரியானதன் ரகசியம் போலும்!

"நான் திறமைசாலி என்பதனுல் எனக்கு மந்திரி பதவி கொடுக்கப்படவில்லை. நான் பொருளாதார நிபுணன்; நாட்டு நிலை உணரும் விற்பன்னன் என்பதல்ல நான் நிதி அமைச்சராயிருக்கும் காரணம். நான் காங்கிரசில் இருக்கிறேன்-அந்த ஒரே தகுதிக்காகத்தான் எனக்கு மந்திரி சபையில் ஒரு நாற்காலி ஒதுக்கப்பட்டிருக்கிறது"—என்று உண்மை நிலையை உரைப்பது போல இருக்கிறது, சுப்ரமணியனுர் பிரசங்கம்!

வேறு கட்சியிலே இருந்தால் மந்திரி பதவி கிடைக்காது—என்பதுதான் அவருடைய தத்துவம் போலும்!

அய்யா, அமைச்சரே! நீரும் உம்மைப் போன்ற பார்ப்பனரல்லாதவர்களும் மந்திரியானதே எங்கள் இயக்கத்தால் தான்! திராவிடர் இயக்கம் மட்டும் இந்த நாட்டிலே தோன்றாமலிருக்காவிட்டால், சுப்ரமணியக் 'கவுண்டர்' நிதி அமைச்சராக இருக்கமாட்டார்; யாரோ ஒரு சுப்ரமணிய அய்யர் அந்த நாற்காலியிலே அமர்ந்து பரிபாலனம் செய்து கொண்டிருப்பார். பார்ப்பனீயம் உங்கள் குரல்வளையை என்றோ நசித்து விட்டிருக்கும்.

—இதை உணர்ந்து கொள்ளுங்கள். அல்லது ஓய்வு நேரத்தில் உங்கள் இருதயத்தோடு பேசிப் பாருங்கள். கூறும் இந்த உண்மையை!

# புதிய காங்கிரஸ்காரர்!

பதவி வெறி பிடித்து, காங்கிரஸ் என்னும் பாழ் குளத்திலே கால் வைக்கும் சிலர்,

"மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே காங்கிரசில் சேர்ந்தேன்"

—என்று கூறுகிறார்கள்.

அப்படியானல்,

இதுவரையில் இவர்கள் மக்களுக்குத் தீமை செய்து வந்தார்களா?

# இரயில்வே தொழிற் சங்க

## ஈடுபாடு குறித்து இரண்டு கடிதங்கள்.

தி. மு. க. பொதுச்செயலாளருக்கு

**தோழர் ஜி. பராங்குசம்**

வரைந்தது.

திருச்சி,
26—9—55

அன்புடையீர்!

''வணக்கம் பல; 'தென் பகுதி இரயில்வேமென் யூனியனி'ல் என்னையும், நம் கழகத்தைச் சேர்ந்த இரயில்வே தொழிலாளர்களையும் சேரவேண்டுமென்று அழைக்கிருர்கள்: அதில் நாம் சேரலாமா? — அல்லது, 'எந்தத் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு வேலை செய்வது' என்று தெரியவில்லை. இரயில்வே தொழிற் சங்கங்களின் எண்ணிக்கையை வளர்த்துக் கொண்டு செல்வதைவிட, இருக்கும் தொழிற் சங்கங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது என நம் கழகத் தோழர்கள் பலரும் சொல்லுகின்றனர். அப்படிப் பார்க்கும்போது, 'எஸ். ஆர். எம். யூ.' ஏற்றது என்று கருதுகிறேன்; தங்கள் கருத்து அறிந்து மேற்கொண்டு நடக்க நானும், என்னைப் போன்ற பிற தோழர்களும் காத்திருக்கிருேம்.

''மேலும்சமீபத்தில் திருவண்ணுமலையில் நடைபெற்ற 'எஸ். ஆர். எம். யூ.' பொதுக் கூட்டத்தில், நமது கழகத் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியுள்ளார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன்; அப்படிக் கலந்து கொள்ளலாமா என்பது பற்றியும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.''

அன்பன்,
**ஜி. பராங்குசம்**

✫

தோழர் ஜி. பராங்குசத்திற்கு

பொதுச் செயலாளரின்

பதில்.

'அறிவகம்', சென்னை-13
10—10—55

அன்புடையீர்!

''வணக்கம். தங்கள் 26—9—55-ஆம் நாளிட்ட முடங்கல் வரப் பெற்றேன்.

''தங்களைப் போலவே இரயில்வே துறையில் வேலை செய்யும் ஏனைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடுடைய தோழர்களும், 'எந்தத் தொழிற்சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுவது?' என்று, என்னை ஆங்காங்கு கேட்ட வண்ணம் இருக்கிருர்கள்.

''பொதுவாகத் தொழிற் சங்கம், கட்சி அடிப்படையில் அமையாமல், 'தொழிலாளர் நலனையே முக்கியமாகக் கருதும் தொழிற் சங்க அடிப்படையில் அமைய வேண்டும்' என்பதைத்தான் நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிருேம். அந்தக் கருத்தை என்றும் வரவேற்க நாம் முன்னணியில் இருக்கவே செய்கிருேம்; ஆனல், அப்படி ஒரு பொது இரயில்வே தொழிற்சங்கம் அமையும் சூழ்நிலை இப்பொழுது ஏற்படவில்லை.

''இரயில்வே தொழிற் சங்கங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாறுபட்ட அரசியல்கட்சிகள் தம் ஆதிக்கத்தின் கீழ்வைத்து நடத்துவதால், அவற்றில் இணைந்து நின்று பணியாற்ற முடியாமல் தி. மு. கழகப் பற்றுடையோர் அவதியுறுகிருர்கள் என்பதை நானும் தெளிவாக உணர்கிறேன்.

''இப்பொழுது முக்கியமாக நான்கு தொழிற் சங்கங்கள் இரயில்வே துறையில் பணியாற்றி வருவதாக அறிகிறேன்; அவை, (1) லேபர் யூனியன்; (2) எம்பிளாயிஸ் அசோசியேஷன்; (3) எம்பிளாயிஸ் யூனியன்; (4) தென்பகுதி இரயில்வே மென் யூனியன்—ஆகும்.

''தொழிற் சங்கங்களின் எண்ணிக்கையை மேன்மேலும் வளர்ப்பதைவிட, இருக்கும் ஒன்றிலேயே ஈடுபடலாமா — என்று, கழகப் பற்றுடையோர் ஆங்காங்கு வினவுகின்றனர். பழக்கம் பெறுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும், இயன்ருல் தொடர்ந்து வளர்ப்பதற்கும் அப்படி ஒரு தொழிற் சங்கத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் நலம் என்றே நானும் கருதுகிறேன்.

''லேபர் யூனியன்—கம்யூனிஸ்டுக் கட்சியினரால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாக இருப்பதால், அதில் இணைந்து பணியாற்றுவது கழகத் தோழர்களுக்கு இயலாத தொன்ருகும்.

''எம்பிளாயிஸ் அசோசியேஷன் —காங்கிரஸ் கட்சியினரால் நடத்தப்படும் ஐ. என். டி. யூ. சி. யின் ஆதிக்கத்தின்கிழ் இருப்பதால் அதுவும் கழகப் பற்றுடையோருக்கு ஏற்பதாகாது.

''எம்பிளாயிஸ் யூனியன்— பெரும்பாலும் காங்கிரசுக்கு ஆதரவு தருபவராகவும், கழகக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவராகவும் விளங்கும் தோழர் எஸ். குருசாமி அவர்களின்கிழ் நடைபெற்று வருவதால் அதுவும் கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று வேலை செய்ய இயலாது.

'தென் பகுதி இரயில்வேமென் யூனியனை எடுத்துக் கொண்டால், அது ஒன்றுதான், கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று வேலை செய்வதற்கு ஏற்றதாக இருக்கிறது. இந்தத் தொழிற் சங்கத்தில் இதுவரையில் ஈடுபட்டிருப்போர் தி. மு. கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படாத ஒத்த கருத்துடையோராக இருந்து வருகின்றனர். மற்றைய இரயில்வே தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மட்டும் கவனிக்க ஏற்பட்டனவாக இருக்கின்றன; ஆனல், எஸ். ஆர். எம். யூ. தொழிலாளர்களின் சமூக வாழ்வு பகுத்தறிவு நெறியில் திருப்பப்பட வேண்டும் என்ற சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையோடு, பொருளாதார நிலையையும் கவனிக்க ஏற்பட்டதாக விளங்கி வருகிறது. மேலும், தி. மு. கழகப் பற்றுடையோர் சிலர் ஆங்காங்கு இந்தத் தொழிற் சங்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்து, ஏற்புடைத்தான முறையில் அமைதியாகவே பணியாற்றி வந்திருக்கின்றனர். இந்தத் தொழிற் சங்கத்தைச் சார்ந்த முக்கியமானவர்களோடு நான் உரையாடிப் பார்த்தபோது, தி. மு. கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று அமைதியாகப் பணியாற்றுவதற்குரிய ஒத்த சூழ்நிலை இருக்கக் கண்டேன்.

''எனவே, தாங்களும், தி. மு. கழக ஏனைய தோழர்களும், எஸ். ஆர். எம். யூனியனில் இணைந்து நின்று பணியாற்றி, பயிற்சியும் பழக்கமும் பெற்றுக் கொள்ளுங்கள்; தி. மு. கழகத் தோழர்களும் கழகச் சொற்பொழிவாளர்களும், தொழிற் சங்க ரீதியில் இந்தத் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு பணியாற்றலாம். வளர்ந்துவரும் சூழ்நிலைக்கு ஏற்ப மாநில மாநாட்டில் திட்டம் தீட்டிக் கொள்ளலாம்.

''தங்களுக்கு நான் எழுதியுள்ள இந்தக் கருத்தையே, தெளிவு பெற விரும்பும் நம் கழகத் தோழர்கள் அனைவருக்கும் கூறவும்.''

அன்பன்,
**இரா. நெடுஞ்செழியன்**


**மகத்தான இரண்டாவது வாரம்!**

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்

இலட்சிய நடிகர்

**எஸ். எஸ். ராஜேந்திரன்**

நாடக மன்றத்தினரின் தினசரி நாடக நிகழ்ச்சி.

தினசரி இரவு 10 மணிக்கு

# மணிமகுடம்

(கதை, வசனம்: மு. கருணாநிதி.)

**கட்டணம்:**

**ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, அணு 6**

**பெண்கள்: தரை அணு 4.**

குறிப்பு: பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். திங்கள்தோறும் விடுமுறை.


எல்லைக் கமிஷன் தீர்ப்பு-
தி. மு. க. விளக்கம்!

**கோகலே மன்றத்தில்**

[மாநில மாநாட்டு நிதிக்காக]

16—10—55

ஞாயிறு காலை 9-மணிக்கு

சிறப்புச் சொற்பொழிவு

தலைவர் :
தோழர் அ. பொ. அரசு

பேசுவோர் :
என். வி. நடராசன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

**நன்கொடை: அணு-8,4.**

## புல்கானின் பார்வைக்கு....

✫ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அடித்த வெள்ளிப்பணம்—அதைக் கொடுத்துவிட்டு எடுத்துச் செல்கின்றனர் இந்தியப் பெண்களின் கற்பை!

அதோ பாரீர்! ஏக்கம் நிறைந்த பார்வை; 'எனக்கிசைந்தஜோடியை இன்னும் வரக்காணேனே! மனக் கிலேசம் தீர்த்து மாப்பிள்ளையின் மடிக்கனம் குறைக்காமல் போனேனே!'—என்று பாடும் தோரணையில் பாவையர் கூட்டம்!

'என்னிடம் வா! ஒரு முறை வா! அடுத்தவள் தராத அற்புத இன்பம் அடுத்தடுத்துத் தருவேன்'-என்று கண்ணினுல் பேசும் காரிகையர் கோட்டம்!

—புல்கானின் பவனி அந்தப் பக்கம் நடைபெறட்டும். அந்த அவமானப் புழுதியிலே மாஸ்கோ மைந்தரின் அலங்காரக்கார் அழகாக உருண்டோடட்டும்!

பஞ்சசீலம் பார்த்தவர் இந்தப் 'பாஞ்சாலி சீல'த்தைப் பார்வையிடட்டும்.

ஜார் காலத்திலே ரஷ்யாவின் சந்து பொந்துகளிலே — சாலையோரக் குழிகளிலே—'மஞ்சள் காகிதம்' என்னும் அரசாங்க அனுமதிச் சீட்டு பெற்ற பரத்தையர் ஜரிகையுடை வாலிபர்களோடு திரிந்தார்களாம். இதோ, காந்தியப் போர்வையிலே, நடமாடும் காங்கிரசின் 'ஜார்கள்', 'லைசென்ஸ்' வழங்கி விபச்சாரத்தைவளர்க்கிருர்கள்.

—புல்கானின் இதைப் பார்க்கட்டும். ஜாரிசம் செத்துவிடவில்லை; இந்தியாவிலே இன்னும் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்!

**— மாறன் எம். ஏ.**

# பிறை வானம்



...பிள்ளைகள் பகுதி...

## சேரிப் பையன்

நள்ளிரவு!

வெண்ணிலவு தன்பொன்னொளியை எங்கும் வீசி பவனி வரத் தொடங்கியது. தனித் தனியே வரிசையாக இருக்கும் சேரிக் குடிசைகள் அந்த ஒளியிலே அழகாகக் காட்சியளித்தன. சேரிக்குப் பின்புறத்திலே சாரைப் பாம்புபோல் வளைந்தோடும் பாலாறு வெள்ளிக் குழம்புபோல் மின்னியது. அந்த ஆற்றங்கரையின் ஓரத்திலே ஓர் அற்புதக் காட்சி கண்ணைப் பறித்தது. ஒரு சிறு பாறை மற்றொரு பெரிய பாறையை சுமந்து நின்று கொண்டிருந்தது. அந்த அழகுக் காட்சியைத்தான் மாடன் வண்ணம் குழைத்து வெள்ளைக் காகிதத்தில் தீட்டிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் பறந்தது.

சித்திரத்தை ஒரு வழியாக முடித்துவிட்டு, அதை தூர வைத்து அழகு பார்த்தான். அதில் தோன்றும் பிழைகளைத் திருத்தினான். அவன் முகத்திலே புன்னகை தவழ்ந்தது. அதிலே நம்பிக்கை சூழ்ந்திருந்தது. அப்பொழுது?

'டாண்... டாண்... டாண்...' என்று சத்திரத்து மணி 12 அடித்து ஓய்ந்தது. மாடன் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு வெற்றிப் புன்னகையுடன், வேக நடை போட்டுக் கொண்டு குடிசையில் நுழைந்தான்.

உள்ளே—மாடனின் அம்மா குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். அகல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அதை நிறுத்திவிட்டு ஒரு கிழிந்து போயிருந்த பாயில் படுத்துக் கொண்டான் மாடன். அவனது எண்ணச் சக்கரம் கடந்த பாதையில் திரும்பி உருண்டோடிக் கொண்டிருந்தது.

★

மாடன் அந்தக் கிராமத்து பள்ளியிலேதான் படித்துக் கொண்டிருந்தான். அதுவும் அவன் தாயின் உழைப்பால் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் படிப்பிலே மட்டுமல்ல; சித்திரம் வரைவதிலும் கை தேர்ந்தவன். ஓவியக் கலைக் கூடத்திலே சேர்ந்துவிட வேண்டும் என்று நீங்காத—நீக்க முடியாத ஆசை! அந்த ஆசைக்கு பாசக் கரம் கொடுத்து உதவ முன் வந்தான் அந்த ஊர் மிராசுதாரின் மகன் ராசு! ஆமாம்; மாடனின் உயிர்த் தோழன்தான் ராசு. இருவரும் ஒரே வகுப்பு! ஆனால்...? அந்த வகுப்பிலே சேரித் தம்பிகளுக்கெல்லாம் அமர்வதற்கான தனியிடம்தான். இருவருக்கும் வித்தியாசத்தைக் காட்டியது.

ராசுவும், மாடனும் நெருங்கிப் பழகுவதை ஏனோ அந்த வகுப்பு மாணவர்களும் ஆசிரியரும் பொறுத்தார்கள். பொருமைக்காரச் சிறுவர்களோ,

"சேரிப் பையா மாடா—உனக்கு
சித்திரம் ஒரு கேடா"—

என்று கேலியாகப் பாடுவதிலே தயங்கியதில்லை. ஆனால், மாடனோ அதைப் பொருட் படுத்தவில்லை. பொருட்படுத்த மாட்டான் என்று ராசுவுக்கும் தெரியும். மாடன் வரையும் படங்களுக்கு விலை கொடுத்து வாங்கும் அளவுக்கு அவனிடம் பரிவு காட்டினான். மாடன் வரைவதற்கான பிரஷ், வண்ணக்கட்டிகள்—முதலியவற்றை ராசுதான் அவ்வப்போது வாங்கித் தருவான் என்றால் சொல்லவும் வேண்டுமா? மாடனை அந்த ஊர் ஓவியக் கலைக் கூடத்திலே சேர்த்துவிட வேண்டும் என்ற அக்கரை ராசுவுக்கு. அதை அவன் அப்பாவின் மூலம் நிறைவேற்ற அவன் எண்ணினான். அதற்கேற்ற ஏற்பாடும் செய்தான்.

ஒரு நாள் மாலை!

மாடன் தன் குடிசையில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். அப்பொழுது—

'மாடா'—ஒரு குரல் கேட்டது.

'யார், ராசுவா?'— தலையை நிமிர்த்திப் பார்த்தான். எதிரே ராசு சிரித்தவாறு நின்றிருந்தான். "ராசு, நீ ஏன் இங்கு வந்தே? யாராகிலும் பார்த்துட்டா ஆபத்தாகிவிடுமே! நீ இங்கு வந்த விஷயம் அப்பாவுக்குத் தெரிஞ்சுட்டா?"—என்று ஒரு கேள்வியைப் போட்டான் மாடன்.

'மாடா, நீ ஏன் பயப்படுகிறாய்? என்றான்ராசு. அவனது 'பூ' போன்ற பாதங்கள், சேரியில் நடந்து வந்ததால் சகதியாக இருந்தது. மாடன் ஒரு தகரப் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தான். ராசு கால்களைக் கழுவிக் கொண்டு குடிசையின் உள்ளே சென்றான். 'மாடா, உனக்கு ஒரு நல்ல சேதி சொல்லப் போறேன்!'—என்றான்.

'அப்படியா? என்னது?'—துடித்தான் மாடன்.

'சொல்லட்டுமா? நீ நேற்று ஒரு இயற்கைப்படம் வரைஞ்சு கொடுத்தியே, அந்தப் படத்தை என் அப்பா எப்படியோ பார்த்து விட்டார். 'இவ்வளவு நன்றாக வரைஞ்சிருக்கியே!' என்று என் முதுகில் தட்டிக் கொடுத்தார். 'இதை வரைஞ்சது நான் இல்லே'ப்பா. எங்க வகுப்பிலே ஒரு பையன் இருக்கான். அவன் இது மட்டுமில்லே'ப்பா; இன்னும் நிறைய வரைஞ்சு வச்சிருக்கான். ஆனால், அவன் ரொம்ப ஏழையப்பா' என்றேன். "அப்படியா? ச்சு... ச்சு..." என்று பரிதாபப் பட்டார். இதுதான் சமயம்னு நான் என்ன சொன்னேன் தெரியுமா? 'அப்பா. அப்பா! அவன் கலைக் கூடத்திலே சேருவதற்கு ரொம்ப கஷ்டப் படுறான். ரொம்ப ஏழையப்பா' என்றேன். என் வார்த்தைக்குத் தான் அவர் எப்பொழுதுமே தடை போட மாட்டார் என்று உனக்குத் தெரியுமே!

'சரி, என்றைக்காவது இங்கே கூட்டிவா'ன்னு சொல்லி விட்டார்! எப்படி என் யோசனை' என்றான் ராசு.

மாடனுக்கு மட்டில்லா மகிழ்ச்சி! 'ராசு' என்று அவனைக் கட்டிப் பிடித்தான். 'எல்லாம் என் அதிர்ஷ்டம்!' என்றான்மாடன் 'இல்லை; இது என் முயற்சி!' என்றான் ராசு. இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். நேரமாய் விடவே ராசனை நகரத்தில் விட்டுவிட்டு வீடு வந்தான் மாடன்.

★

இதையெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த மாடனுக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்தான். பொழுது எப்போது விடியும் என்று எதிர்பார்த்தான். 'நாளைக்கு தான் நம் வாழ்விலே புது தினம்!—வெற்றிநாள்!' என்று அவன் வாய் முணுமுணுத்தது. எப்படியோ தூங்கியும் விட்டான்.

மறு நாள் காலை.

மாடனின் முகத்திலே என்றுமில்லாத புத்தொளி! செய்கையிலே பரபரப்பு! துவைத்து வைத்திருந்த துணியை உடுத்திக் கொண்டான். தான் வரைந்த படங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ராசுவின் வீட்டையடைந்தான். பங்களாவின் கேட்டை வாசலை நெருங்கியதும் அவன் இருதயம் 'பட்...பட்' என்று அடித்துக் கொண்டது. "என்ன என்ன கேட்பார். அதற்கு எப்படி எப்படி பதில் சொல்லலாம்"—என்று எண்ணியவாறு தயங்கித் தயங்கி நின்றான்.

'மாடா, ஏன் அங்கேயே நிக்கறே? உள்ளே வா!' என்ற ராசுவின் குரல் கேட்டு சற்று தைரியத்துடன் உள்ளே சென்றான். 'இவன் தானப்பா நான் சொன்னபையன். அந்த இயற்கைப்படத்தை வரைந்தவன்.' என்று அப்பாவிடம் மாடனை அறிமுகப்படுத்தி வைத்தான், ராசு.

'அப்படியா! உட்காரு தம்பி! ஆமா! இன்னும் என்னென்ன எழுதியிருக்கே?' என்றார் அப்பா!

மாடன் எடுத்துவந்த படத்தையெல்லாம் அவரிடம் கொடுத்தான். அப்பொழுது அவன் கைகள் நடுக்கம் கண்டன. ராசுவின் அப்பா அதைக் கவனிக்கவில்லை. படத்தை வாங்கிப் பார்த்தார். எல்லாம் புரட்சி வேந்தர்களின் படங்கள். அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஆப்ரகாம்—ஏழையின் கண் துடைத்த ஸ்டாலின்—விஷமேந்திய சாக்ரடீஸ்—இது போன்ற படங்கள் தான் மாடனுக்குப் பிடிக்கும்! படங்கள் ராசுவின் அப்பாவைக் கவர்ந்தன. ஆச்சரியத்துடன் மாடனைப் பார்த்தார்.

"தம்பீ! உன் பெயர் என்ன?" என்றார்.

"மாடனுங்க" என்றான் அவன்.

"என்ன மாடனா?"—முகத்தைச் சுளித்துக் கொண்டார் அவர்.

"ஆமாங்க, ஊர் கோடியிலே இருக்கே சேரி, அங்கேதான் என் வீடு" என்றான் மாடன்.

"சேரியா? அப்படின்னா நீ பறையனா! அட ஆச்சாரமே! இவனை யார் உள்ளே சேர்த்தது?" என்று தலையில் அடித்துக் கொண்டார், அவர். மாடன் இதை எதிர் பார்த்தான். ஆனால் கெஞ்சினான். 'ரொம்ப ஏழைங்க' என்றான்.

'டேய் பயலே! மரியாதையா எழுந்து போய்விடு!' என்று கர்ஜித்தார் அப்பா. ராசு விழித்தான். மாடன் அவரின் கையைப் பிடித்துக் கொண்டான்; 'சாமி, நீங்க தான் என்னைக் காப்பாத்த வேணும்!' என்றான். அவர் கையை உதறிவிட்டார். மறுகணம் ஒரு இரும்புக் கரம் மாடனின் கழுத்தைப் பிடித்து வாசலுக்கு வெளியே தள்ளியது. 'ஐயோ! ராசு!' என்று கத்தினான் மாடன். ராசு மாடனின் குரலைக் கேட்க முடியாத செவிடனாய் — அப்பாவை எதிர்க்க முடியாத ஊமையாய் நின்று விட்டான்.

விழுந்த வேகத்திலே மாடனின் நெற்றியில் பலத்த அடி! ரத்தம் கசிந்தது. ரத்தத்தை துடைத்தவாறே எழுந்தான். 'அட, சண்டாளர்களே, பணம் படைத்தவர்களே, உங்கள் சுபாவமே இப்படித்தானா? இந்த உலகத்தில் ஏழையாகப் பிறந்தாலும் பாதகமில்லை. ஆனால், சாதியில் தாழ்ந்த ஏழையாகப் பிறக்கக் கூடாது என்கிறீர்களே!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அவன் எழுதிய புரட்சி வேந்தர்களின் ஓவியங்கள் மாடனைப் பார்த்து ஏதோ கூறுவது போல் இருந்தது. ஆனால், அவைகள் படங்கள்! உண்மையிலே உயிர் இருந்தால் பேசித்தான் இருப்பார்கள். அந்தப் படங்களையெல்லாம் எடுத்தான் மாடன். அவன் நெற்றியிலே வழியும் ரத்தத்தைத் துடைத்தான். மெள்ள எழுந்து தள்ளாடித் தள்ளாடி நடந்தான். அப்பொழுது

சேரிப் பையா மாடா-உனக்கு
சித்திரம் ஒரு கேடா

என்று யாரோ பாடுவது போல் இருந்தது அவனுக்கு. அவன் திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

— ந. கண்ணன்.

## 'எழுத்தாணி'

சி. சு. தேவராசன்; சிறுகதையூர்.

(?) நேருவுக்குக் கண் கண்ட தெய்வம் எது?

கிருஷ்ணமேனன்! ஆனுல் இந்தக் கடவுளை மந்திரிசபைக் கோவிலில் வைத்து பிரதிஷ்டை செய்வதற்குத்தான் பல பூசாரிகள் எதிர்ப்பு காட்டுகின்றனர்!

(?) திருடன் எப்போது தான் திருடியதை ஒத்துக்கொள்வான்?

மனசாட்சியோடு பேசும்போது!

[?] டால்மியா கைதாமே, உண்மையா?

ஆமாம்; நீர் சந்தேகப் படுகிற அளவுக்குத் தான் பத்திரிகைகள் அந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கின்றன!

> இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
> (●) வே. தங்கையா,
> சரோஜா சலவை நிலையம்,
> மதுரை ரோடு,
> நெல்லை சந்திப்பு.

மு. கந்தசாமி; அம்மாசத்திரம்.

[?] காமராசருக்கு ஏன் பாரத ரத்ன பட்டம் கொடுக்கப்படவில்லை?

அதை அவர் 'நாடார்' என்ற காரணத்தாலிருக்கும்!

எம். வீரையா; சுங்கைப் பட்டாணி.

(?) தமிழ் நாட்டில் ஆரியத்தின் பிடியில் சிக்காத தொழில் எது?

சாமி தூக்கும் தொழில்; கக்கூஸ் கூட்டும் தொழில்!

(●) வே. தங்கையா; நெல்லை.

[?] பாவத்தின் மொத்த வியாபாரி யார்?

'புண்ணியத்து'க்கு ஐ. பி. கொடுத்தவன்!




சி. துரைசாமி; வேப்பம்பட்டு.

(?) ராஜாஜி உயிரோடு இருக்கிறாரா?

இல்லை; அரசியலைப் பொறுத்த வரையில் அவர் உயிரோடு இருப்பதாகத் தெரியவில்லை.

மோகன் ராஜ்; ஆல்தோட்டம்.

(?) முதன் முதலில் செய்திப் பத்திரிகை எப்போது உற்பத்தியானது?

இரண்டு பெண்கள் சந்தித்த போது!

தமிழ்நெஞ்சன்; புதுக்கோட்டை.

(?) சென்னை அரசியலிலிருந்து விரட்டப்பட்ட ஆச்சாரியாரும், சீனுவிலிருந்து விரட்டப்பட்ட சியாங்கே ஷேக்கும் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள்?

'சீனுவில் இராமாயணம் இல்லையா?' என்று ஆச்சாரியார் கேட்க, 'அய்யய்யோ! பி. சி. ஜி. பற்றியும் எங்கள் நாட்டு மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களே!'—என்று சொல்லி சியாங் கண்ணீர் வடிப்பார்!

சி. மு. சுல்தான்; வேலூர்.

(?) முஸ்லிம்கள் தி. மு. க. வில் சேரக் கூடாதென்று ஒரு சின்னது சொல்கிறதே; அது உண்மையா?

இந்தக் கேள்வியை சப்தம் போட்டுக் கேட்காதீர்கள்; செத்துப் போன மஜீத் சிரிக்கப் போகிறான்!

டி. முனுசாமி; பனயம்பள்ளி.

(?) நாடு பெரிதா? மொழி பெரிதா?

நாடு உடல்; மொழி உயிர்—இரண்டுமே பிரிகக முடியாதவை.

சே. அப்துல் கரீம்; காரைக்குடி.

(?) நீர் விவேகானந்தராக இருந்து, பரமஹம்சரிடம் சென்று 'கடவுளைக் காட்டு' — என்று கேள்வி கேட்டு, அவர் உம்மை 'இதோ கடவுள்!' என்று அணைத்துக் கொண்டால் நீர் என்ன செய்வீர்?

உடனே, 'அக்கார வடிசிலும், ஆராதனைகளும் எங்கே?' என்று கேட்பேன்.

கு. சு. பாண்டியன்; குற்றாலம்.

(?) திராவிடப் பெண்ணுக்குரிய இலக்கணம் என்ன?

அப்பா நேருவாக இருந்த போதிலும், கணவனோடு இருந்து இல்லறம் நடத்த வேண்டுமென்பது தான்!

## வெள்ளம்-ஒரு விளக்கம்.....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

சுவர் எழுப்புகிறார்கள்—என்று கேலி செய்கிறது, உண்மையை இழுத்து ஊரார் முன் நிறுத்துகிறது சங்கர் தீட்டிய ஓவியம்!

இதே நிகழ்ச்சியையே மையப் பொருளாகக் கொண்டு, கையிழந்தோன் நிலையிலே இருக்கும் தென்னகத்தின் உணர்ச்சிகளை வெளியிடுகிறது 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலே அக். 11-ந்தேதி வெளிவந்துள்ள கார்ட்டூன்!

'சரித்திரம் அறிந்த வரையில் யமுனை நதியின் வெள்ளம் இன்றுதான் முதல் முறையாக புதுடில்லி நகருக்குள் புகுந்திருக்கிறது. அரசாங்க அலுவலகத்தில்கூட நீர் நுழைந்து விட்டது'

—இது செய்தி!

'சுதேசமித்திரன்'செப்புகிறது, புதுடில்லியில் நுழைந்திருப்பது யமுனையாற்றின் வெள்ளமல்ல; அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் தென்னகத்து மாந்தரின் உணர்ச்சி வெள்ளமென்று! இந்த வெள்ளம் தோற்று வாயிலே மழை பெய்ததால் தோன்றவில்லை; தாய்மொழி யென்னும் வெடி மருந்துச் சாலையில் வேற்று மொழியாம் இந்தி என்னும் நெருப்பு கொட்டப்பட்டதால் தோன்றியிருக்கிறது. இந்த எதிர்ப்பு வெள்ளம்'!

இந்த வெள்ளம் அரசாங்க அலுவலகத்தில் மட்டும் புகாது; நிலைமைகள் நீடித்தால், சந்தர்ப்பங்கள் நிர்ப்பந்தம் செய்தால், வடநாட்டையே வேட்டைக் காடாக்கி வெற்றி மழை பொழியச் செய்யும். எனவேதான் அறிவிக்கிறோம், ஆளவந்தாரே! பொறி விழுந்த கந்தகத் தூள் வெடித்துச் சிதறுவதற்கு அதிக நேரம் பிடிக்காது. அலைக்கரம் நீட்டி மலையையும் சாய்த்துவிடும் வேகம்கொண்ட இந்தி எதிர்ப்பு எழுகடல்போல் சேர்ந்துவிட்டது. ஆளவந்தாரே, அணை போடுவீர்; இந்தியைத் திரும்ப அழைத்து அறிவுள்ளவர் ஆவீர்—என அறிவிக்கிறது, தென்னகத்து வெள்ளம்.

—மித்திரனுடைய சித்திரத்துக்கு இந்த அளவு பேசும் துணிவு கிடையாதாயினும், 'அவர்கள்' உள்ளமும் இந்த 'வெள்ள'த்தால் நனைந்திருக்கிறது; அவர்களும் இந்த வெள்ளத்தில் கலந்திருக்கும் துளிகள்-என்பதை யாரும் மறுக்க முடியாது!

அந்தத் 'துளிகள்' வேண்டுமானால் இந்தித் திணிப்பின் வேகத்தை மட்டும் எதிர்த்து, 'மெது நடை இந்தி'க்கு ஆதரவு நல்கும் தன்மை கொண்டதாய் இருக்கலாம். ஆனுல் இந்தத் 'துளிகளை'த் தவிர்த்து தென்னகத்து வெள்ளமோ தமிழும், தமிழரும் உள்ள அளவு எந்த ருபத்தில் இந்தி நுழைந்தாலும் அதைக் கல்லறைக்கு அனுப்பக் காத்திருக்கிறது — என்பதையும் மித்திரனார் உணர வேண்டுகிறோம்.

சுதேசமித்திரன் வடநாட்டைச் சூழும் இந்தி எதிர்ப்பு வெள்ளத்தை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது. இந்தச் சித்திரத்தில்! சுதேசமித்திரன் சுட்டிக் காட்டுவதற்கு பயப்படும் வெள்ள மொன்றும் இங்கே தேங்கி நிற்கிறது—உடைப்பெடுத்துக் கொண்டு ஓடுவதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு! அதுதான் திராவிட நாட்டுப் பிரிவினை வெள்ளம்! உள்ளத்தால் ஒருவராய்—உடலால் பலராய் இருக்கும் அந்த இன உணர்ச்சி வீரர்கள் இரணகளம் நோக்கிப் புறப்பட்டால், ஆதிபத்யக் காவலர்கள் ஒடுங்குவதற்கு இடம் தேடி இமயத்தின் உச்சிக்குத் தான் ஓடவேண்டும்.

மோரியர் கட்டிய பேரரசுக் கோட்டை பொடிப் பொடியாகி விட்டது!

குப்தர்களின் கும்மாளம் சில ஆண்டுகளுக்குமேல் நிற்கவில்லை!

மொகலாயர் சாம்ராஜ்யம் சரிந்து விட்டது!

வெள்ளையரின் விசால பூமியும் வீழ்ச்சிச் சரிவிலே உருண்டு விட்டது!

டில்லி, இடம் தேடும் ஏகாதிபத்யங்களை அதிக நாள் அனுமதித்தது கிடையாது.

இப்போது டில்லியிலே இருக்கும் வடநாட்டு ஏகாதிபத்யத்துக்கும் சொல்லிக் காட்ட விரும்புகிறோம்—தெற்கைச் சுரண்டுவதைத்தான் உங்கள் சுகபோகமாகக் கொண்டீர்களேயானுல், இங்கிருந்து புறப்படும் பிரிவினை வெள்ளம்!—அது ஏகாதிபத்யங்களுக்குப் பாடம் கற்பித்த 'கால வெள்ள'த்தை விடக் கொடியது—இதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

★


**'முரசொலி'**

**இலங்கைத் தோழர்களுக்கு:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.